பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆடி 5 ஷஃபான் 3 இதழ்: 159
யாழ்ப்பாணம் புதன்கிழமை 20-7-77

# ஜனாதிபதி சஞ்சீவரெட்டி போட்டியின்றித் தெரிவு

புதுடில்லி, ஜூலை 19 பாரதத்தின் புதிய -ஆறுவது ஜனாதிபதியாக திரு. நீலன் சஞ்சீவரெட்டி நாளை மறுதினம் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் படுவார்!

இந்திய ஜனாதிபதி பதவிக்கு மொத்தம் 26 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த போதிலும், 21 பேரின் வேட்பு மனுக்கள் இன்று நிராகரிக்கப்பட்டன. இது தவிர நான்குபேர், திரு. நீலன் சஞ்சீவரெட்டியின் பேரிலேயே தங்கள் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்!

வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான காலக்கெடு, வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. இதன் பின்னர் திரு. நீலன் சஞ்சீவரெட்டியின் தெரிவு அன்றைய தினமே முறைப்படி அறிவிக்கப்படும்.

முன்னர் அறிவித்தபடி இந்திய ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிருந்தால் ஆகஸ்ட் மாதம் ஆறும் திகதி தெரிவு நடைபெறுமென்று இருந்தது.

(முன்பு வந்த செய்தி மூன்றும் பக்கம்)

# “தேர்தல் சுதந்திரமாக நடைபெற உதவுங்கள்”

## ஜனாதிபதி அலுவலகம் மூலம் கட்சித் தலைவர்கள் கோரிக்கை

(கொழும்பு, புதன்)

நாளை வியாழக்கிழமை இருபத்தோராம் திகதி நடக்கப்போகும் இலங்கைக் குடியரசின் முதலாவது பொதுத் தேர்தலில் அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் வாக்களிக்குமாறு ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து இன்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் வாக்காளப் பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் குடியரசின் அரசியல் தலைவர்களால் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட இக் கூட்டு அறிக்கையில்; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திருவாளர்கள்: அ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் டாக்டர் என். எம். பெரோரா, மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் திரு தினேஷ் குணவர்த்தனு, திரு. ரி. பி. சுபசிங்கா, தமிழரசுக்கட்சி சார்பில் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. பீட்டர் கெனமன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் பிரிவு) சார்பில் திரு. எம். எஸ் செல்லச்சாமி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் அரசியல் தலைவர்கள் விடுத்த கோரிக்கை வருமாறு:-

“நாளை நடைபெறப்போகும் பொதுத்தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் அமைதியாகவும் இருக்க வாக்காளப் பெருமக்கள் உதவவேண்டும். இதனை உறுதிப்படுத்துவதன் மூலம் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கு பூரண ஒத்துழைப்பை நீங்கள் நல்க முடியும்”.

“நம்நாட்டு மக்கள் ஜனநாயகத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டவர்கள். ஜனநாயகப்பாரம்பரியம் எந்த விதத்திலும் காப்பாற்றப்படவேண்டும்”

“எந்த ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளரினதோ அல்லது சார்பானவரினதோ சொத்துக்களை அல்லது சாதனங்களை நாசப்படுத்தும் செயலில் எவரும் இறங்கக்கூடாது. வன்செயல்கள் தலைதூக்க அனுமதிக்கக்கூடாது. சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி, நாட்டில் நேர்மையான - அமைதியான தேர்தல் நடைபெற நாட்டு மக்கள் அனைவரும் பங்காற்ற வேண்டும்” என்று அரசியல் தலைவர்களின் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சமயத் தலைவர்கள் கோரிக்கை

மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்க தேரோக்கள் விடுத்துள்ள அறிக்கையில்; நாட்டினதும் மக்களினதும் கௌரவம் எவ்வகையிலும் பாதுகாக்கப் படவேண்டுமென்று தெரிவித்துள்ளனர்.

“நாட்டின் சில பகுதிகளில் தேர்தலை முன்னிட்டு வன்செயல்கள் தலைதூக்கியிருப்பது பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் அளித்திருக்கிறது பொதுத்தேர்தலில் ஒரு வாக்காளர், தாம் விரும்பும் அபேட்சகருக்கு தனது வாக்கை அளிக்க பூரணசுதந்திரமுண்டு. இதனைப் பயமுறுத்தல் மூலமாகவோ அல்லது காலித்தனம் மூலமாகவோ தடுக்க எவரும் முயற்சிக்கக் கூடாது. ஜனநாயக கோட்பாடுகளைக் கட்டிக்காக்கும் எமது நாட்டின் தேர்தலை உலக நாடுகளும் உன்னிப்பாகக் கவனிக்கின்றன. இத்தேர்தல் சுதந்திரமாக நடைபெறுவதை நாட்டு மக்கள் அனைவரும் உறுதிப்படுத்தவேண்டும்” என்றும் அவர்கள் தங்களின் கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பிஷப் விடுத்திருக்கும் அறிக்கையில்; தேர்தலை நேர்மையாக நடத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளுக்குப் பூரண ஒத்துழைப்பு அளிப்பதன் மூலம் வன்செயல்கள் தலைதூக்குவதை தடை செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இராமகிருஷ்ணமிஷனின் இலங்கை கிளைத் தலைவர் ஸ்ரீ பிரேமத்மானந்தாஜி, கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிரதம தர்மகர்த்தா விடுத்துள்ள வேண்டுகோள்களிலும் மேற்கண்ட கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

# வாக்களிப்பு நிலையங்களை இன்றுபொறுப்பேற்பர்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில், தேர்தல் தினத்தன்று கடமையாற்ற விருக்கும் உத்தியோகத்தர்கள். நேற்று யாழ்ப்பாணம் தேர்தல் கந்தோருக்கு வந்துசேர்ந்தனர். இவர்கள் இன்று தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று பொறுப்பேற்றுக் கொள்வார்கள்.

வடபகுதியில் தேர்தல் தொடர்பான வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டதென உதவி தேர்தல் ஆணையாளர் திரு ஆர். யோகநாதன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்தும், மற்றும் பகுதிகளிலிருந்தும் கதர்தல் உத்தியோகத்தர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து, தங்கள் வரவை தேர்தல் கந்தோரில் பதிவு செய்து கொண்டனர்.

நூற்றுக்கு மேற்பட்ட ஜீப் வண்டிகளும், வாகனங்களும், தேர்தல் வேலைகளுக்காக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு தேர்தல் உத்தியோகத்தர்களை கொண்டு செல்வதற்கும் மற்றும் தேர்தல் தொடர்பான வேலைகளுக்கும் இந்த வாகனங்கள் பயன்படுத்தப்படவிருக்கிறது.

தேர்தல் தினத்தன்று

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழீழ குடியரசை நிறுவ உதவும் தேர்தல் இது

## கூட்டணிச் செயலதிபர்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

“தமிழ்இனத்தின் வரலாற்றில் அதிமுக்கியமான இத்தேர்தல் ஒரு மக்கள் வாக்கெடுப்பு என்பதை மீண்டும் ஞாபகப் படுத்த விரும்புகின்றோம். தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையைக் கட்டிக்காக்கவும், அதன் அடிப்படையில் தமிழ்ஈழத்தை மீட்டெடுக்கவும், ஒரு சுதந்திர மதச்சார்பற்ற சமதர்ம தமிழ் ஈழக் குடியரசை நிறுவவும், இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ் பேசும் மக்களின் தன்மான

( -ம் பக்கம் பார்க்க)

# “ஆட்சிமன்றம் செல்ல நான் ஏன் விரும்புகிறேன்?”

## சுயாட்சி நவம் விளக்கம்

புங்குடுதீவு, செவ்

“அடுத்துப் பதவிக்குவரும் அரசாங்கத்தோடு கூட்டணி சார்பில் வெற்றியீட்டும் எம். பி.கள் ஒத்துழைக்கக் கூடிய ஆபத்து எதிர் நோக்கியுள்ளது. எந்தச் சந்தர்ப்பத்திலாவது கூட்டணி, அரசாங்கத்தோடு ஒத்துழைக்குமானுல் அதைத் தடுத்து நிறுத்தவே என்னைத் தெரிவு செய்யுங்கள் என்று நான் வேண்டுகிறேன்”

இவ்வாறு புங்குடுதீவு பெருங்காட்டில் நடைபெற்ற தமது இறுதிப்பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழர் சுயாட்சிக்கழக வேட்பாளர் திரு.வ.நவரத்தினம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் திரு வ.நவரத்தினம் குறிப்பிட்

(8-ம் பக்கம் பார்க்க)

# ‘தமிழ்மக்களுக்கு முக்கியமான தேர்தல்’

—குமார்

யாழ்ப்பாணம், புதன்

“இந்தத் தேர்தல் தமிழ்மக்களுக்கு முக்கியமான தேர்தல். தமிழ் மக்கள் சர்வாதிகாரத்தைச் சகிக்கத் தயாராக இருக்கின்றார்களா அல்லது வன்செயலைக் கண்டிக்கின்றார்களா என்பதை நிர்ணயிக்கும் தேர்தலாகும். நாடுமுன்னேற கூட்டணிக்கு எதிரான கட்சியொன்று தேவையென்பதற்காக எனக்கு வாக்களியுங்கள்.”

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமான திரு. குமார் பொன்னம்பலம் தமது இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசுகை

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கடைக்குத் தேவையான அலுமாரி மற்றும் தளவாடங்கள் விற்கப்படும். சு. மி. முகமட் மொஹிடீன், 112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
6684

## பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளிலும் கப்பல்களிலும் வேலைகள் பெற ஏற்ற பயிற்சிகள், கல்வி அமைச்சினால் தொழிற்பயிற்சி நிலையமென அங்கீகாரம் பெற்ற இலங்கையின் ஒரே பயிற்சிநிலையம். NIBT, வெல்டிங் (Electric and Gas)இலெக்றிக் வயரிங், றேடியோ (Transistor) Motor Mech--anism, City and Guilds (Electrical) P.M.G. (Special) Certificate பகல் - இரவு வகுப்புகள். National Institutes, மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
6610

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B. ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
6686

## மாந்திரீகம்

கணவன்-மனைவி பிணக்கா? காதலா? பரீட்சையா? தொழிலா? வியாபாரத் தடையா? கிரகதோஷமா? எதிரிகள் தொல்லையா? விவாகத் தடையா? செவ்வாய் தோஷமா? உங்கள் கைரேகை பலன் அறியவேண்டுமா? ஆண்கள் வலது கை பெருவிரல் அடையாளத்தையும், பெண்கள் இடது கை பெருவிரல் அடையாளத்துடன் பிறந்த வருடம், மாதம், திகதியைக் குறிப்பிட்டு அல்லது குறிப்புடன் 5 ரூபாயுடன் அனுப்பினால் உங்கள் முக்கால பலனையும் அறியத்தரலாம். மட்டக்களப்பு குமாரசண்முகம், கண்ணன் மருந்துச்சாலை, இணுவில்.
6681

## தவறிவிட்டது

Q 632652 இலக்க கூப்பன் புத்தகம் 11-7-77 அன்று கஸ்தூரியார் வீதிக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. சண்முகநாதன், கைதடி, வடக்கு, கைதடி.
6690

## நகராட்சி மன்றம் சாவகச்சேரி

### ஆதனவரி அறிவித்தல்

1977-ம் ஆண்டு 2-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரி செலுத்துவதற்கு 28-7-1977ம் திகதிவரை கால நீடிப்புச்செய்யப்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் செலுத்தவேண்டிய வரிகளை 28-7-1977-ம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவேண்டும். தவறின், ஆதனவரியுடன் பத்துவீதம் பற்றுணைப் பணமும் சேர்த்து அறவிடப்படுமென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்
நகரசபை, சாவகச்சேரி.
நகரசபை அலுவலகர்,
சாவகச்சேரி.
15-7-1977.
6669

# இன்று ஸ்ரீ ஆண்டாள் ஆடிப்பூரம்

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஆண்டாள் பூர்வதர்ம உற்சவம் (ஆடிப் பூரம்) இன்று புதன்கிழமை நடைபெறவிருக்கிறது.

விசேஷபூஜை தீபாராதனையும் இடம்பெறும். (உ)

ஃ ஃ ஃ

(சுழிபுரம்)

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில், ஆடிப் பூரத்தை முன்னிட்டு, இன்று பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும், தொடர்ந்து விசேட பூசையும் நடைபெறும்.

இரவு நிகழ்ச்சியாக, விசேட சொற்பொழிவும், அதனைத் தொடர்ந்து, அம்பாள் திருவுலா வரும் காட்சியும் இடம் பெறும். (இ)

# கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு. 12563

லோறன்ஸ் மௌறிக் பவுலியர் 10/2, மல்வத்தை அவனியூ, நுகேகொடை. தற்சமயம் 33, றெயில்வே விடுதி, அநுராதபுரம்.

வழக்காளி

எதிராக

ஓக்கஸ் அந்தோனிப்பிள்ளையும் பெண் ஞானசோதி இருவரும் கோட் ஒழுங்கை மல்லாகம். எதிரிகள்.

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் இல. ஈடு 12563 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 5208-33. பின் 12-6-71 தொடக்கம் 9-5-72 வரைக்கும் ரூபா 5000/-க்கு 10 வீத வட்டியும் பின் முழுத்தொகைக்கும் இறுபடும் வரையும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 513 சதம் 55. இதில் செலவுத் தொகையால் ரூபா 250-ம் கொடுக்கப்பட்டது.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தெல்லிப்பழைக் கோயிற்பற்று தெல்லிப்பழை கிழக்கு இறை 'பிட்டிப்பதி' பரப்பு நில. இலா 17ம் 8, 20/32 குளி வீடும் கிணறும் இதில் சொரியலாக பரப்பு நில இலா. 6 குளி 13 56/160 குளி இதற்கு எல்லை கிழக்கு தம்பர் சுப்பருக்கும் முன்னுரிமைக்காரருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு ஒழுங்கையும் இடுகாடும்.

சி. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனை ஆணையாளரும் விலை மதிப்பாளரும்.

'விதானை வளவு'
சித்தங்கேணி,
28-6-77.
6683

# "சேவையில் ஏபிரகாம் துரையப்பா போன்றவர்"

யாழ்ப்பாணம், புதன்

"துரையப்பாவின் சேவை இந்தநாட்டிற்குத்தேவையென்றால் டாக்டர் ஏ. எல். ஏபிரகாமை ஆதரியுங்கள்" என்று யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளரான டாக்டர் ஏ. எல். ஏபிரகாமுக்கு ஆதரவாக முஸ்லிம் வட்டாரம் காதி அபூபக்கர் வீதியில் ஜனுப் தாசிம் தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் திரு. எஸ். பாலசிங்கம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"1970-ம் ஆண்டு யாழ்ப்பாணம் தொகுதி முஸ்லிம் பெருமக்கள் எப்படி மறைந்த முதல்வர் திரு. அல்பிரட் தங்கராஜா துரையப்பாவை ஆதரித்தார்களோ அவ்வண்ணம் இம்முறை டாக்டர் ஏபிரகாமை ஆதரிக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள். முஸ்லிம் பெருமக்கள் அனைவரும் சாதி மத பேதங்களை மறந்து நாட்டிற்கு நல்லவனும் வல்லவனும் ஏழைபங்காளனுமான டாக்டரைத் தெரிவுசெய்வார்களானால் மறைந்த முதல்வர் துரையப்பாவின் சேவையைத் தொடர்ந்து பெறலாம். துரையப்பாவின் அபிமானிகள் தம்மையே ஆதரிப்பதாகவும் டாக்டர் 20-ம் திகதியுடன் போட்டியினின்றும் விலகிவிடுவார் என்றும் பொய்ப்பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.

துரையப்பாவின் உடன் பிறந்த சகோதரர் டாக்டர் பக்கம் நிற்கையில் ஆதரவாளர்கள் வேறுயாரையும் ஆதரிக்கமாட்டார்கள் என்பது உறுதி. டாக்டர் போட்டியினின்றும் விலகப்போவதுமில்லை. டாக்டர் வெற்றியின் உச்சத்தில் நிற்கிறார்."

டாக்டர் ஏபிரகாம் பேசுகையில் கூறியதாவது:-

"சுயேச்சை வாதியாகப் போட்டியிடுகின்ற நான் மக்களுக்கு எப்படிச் சேவைசெய்வேன் என்பதை எனது தேர்தல் விஞ்ஞாபனத்தைப் படித்து அறிந்துகொள்வீர்கள். வீடமைப்பு, சுகாதார வசதி, தொழில் வாய்ப்பு இன்னோரன்ன விஷயங்களில் யாழ் தொகுதி மக்கள் பயன்பெறக்கூடியதாகச் சேவை செய்வேன் என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ளுகின்றேன். நான் மக்களின் குறைகளை நன்கு அறிந்தவன் என்ற ரீதியில் இரவு பகல் பாராது வைத்தியன் என்ற முறையில் மக்களுக்குச் சேவை செய்பவன் என்ற ரீதியில் யாழ். மக்கள் தமது ஆதரவை எனக்கு அளிப்பார்கள் என்பது எனது நம்பிக்கை."

வேறு பலரும் பேசினர்.

(கூ)

# மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா

மாவிட்டபுரம், செவ்.

மாவிட்டபுரம்ஊரியவத்தை காளியம்பாள் ஆலயமண்டலாபிஷேகப் பூர்த்திவிழா எதிர் வரும் 23-ம் திகதி நடைபெற உள்ளது.

அன்று பகல் விசேஷ சங்காபிஷேகமும் இரவு விசேஷ திருவிழாவும் நடைபெறும் சமயச் சொற்பொழிவுகள், இசைநிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம் பெறும். (அ)

ஆசிரியருக்குக் கடிதம்:

# புற்றுநோய் சிகிச்சைநிலையம்: யாழ். றோட்டரிச்சங்கம் உதவி

யாழ்ப்பாணம் புற்றுநோய்ச் சங்கத்தின் முயற்சியினால் பின்வரும் நான்கு சங்கங்களில் நன்னான்குபேர் சேர்ந்த ஒரு குழு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைக்கும் நோக்கத்துக்கு மட்டும் தொடங்கப்பட்டது. [1] வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கம், [2]யாழ். லயன்ஸ் கழகம், [3] யாழ். றோட்டரிச்சங்கம், [4] யாழ். சங்கம்.

சிலமாதங்களுக்குமுன் யாழ். லயன்ஸ் கழகம் கார்ணிவல் தொடங்குமுன் மேற்படி குழுவுக்கு அறிவித்து அவர்களுடைய ஆசியையும் ஆதரவையும் கோரினார்கள் கார்ணிவலில் சேரும் பணம் முழுவதையும் சிகிச்சை நிலையத்துக்கே கொடுப்பதாகவும் தெரிவித்தார்கள்.

கார்ணிவல் முடிந்தபின் லயன்ஸ் கழகத்தில் ஒருவர் ஒரு சிறுதொகையை ஏதோ ஒரு நல்ல விஷயத்துக்குக்கொடுக்குமாறு கேட்டபொழுது தலைவர் திரு மகேசனும் மற்றவர்களும் மறுத்துவிட்டார்கள்.

11-6-77 இல் லயன்ஸ் கழகம் 35,000 ரூபாயைக் கையளித்த வைபவத்தில் திரு. மகேசன் அவர்கள் கெதியில் றோட்டரிச் சங்கமும் ஒரு கார்ணிவல் நடத்தி புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு உதவுவார்கள் என்று சொன்ன பொழுது திரு. ஆர். ஜே.குணரத்தினம் அவர்கள் 'கார்ணிவலில் சேரும் பணத்தில் பெருந்தொகையை சிகிச்சை நிலையத்துக்குக் கொடுப்போம்' என்று சொன்னார்களே அல்லாமல் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்கு அல்லது வேறு எந்த ஸ்தாபனத்துக்காகுதல் ஏதும் கொடுக்கப்போகிறோமென்று சொல்லவேஇல்லை. அந்தக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் இருந்தார்கள். அப்படிச் சொல்லி இருந்தால் இப்போ ஆச்சரியப்படத்தேவை வந்திருக்கமாட்டாது.

28-6-77-ல் 'ஈழநாடு' இதழில் வெளிவந்த றோட்டரிச்சங்கம் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது.

'யாழ்ப்பாணத்தில் ஒரு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைக்கும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் றோட்டரிச் சங்கம் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிப் பழைய மாணவர்சங்க உறுப்பினரின் உதவியுடன் ஒரு பொருட்காட்சியையும் கார்ணிவலையும் அடுத்தமாதம் 30-ம் திகதிமுதல் ஆகஸ்ட் 10-ம் திகதிவரையும் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்துவருகின்றனர்'.

இதைப்பார்த்தவுடன் சிலர் தொலைபேசியிலும் நேரிலும் என்னிடம் விசாரித்தனர். இதுபற்றி நான் எங்கள் குழுத்தலைவரும், றோட்டரியில் ஒரு பெரிய தலைவருமான சட்டத்தரணி எஸ் கனகரத்தினத்திற்கு ஒருகாகிதம்அனுப்பினேன். இதன் விளக்கத்தைப் பத்திரிகைமூலம் அறிவிக்கும்படி கேட்டிருந்தேன் 3-7-77 காலை திரு கனகரத்தினமும், திரு குணரத்தினமும் என் வீட்டுக்கு வந்து இதைப்பற்றிக் கதைத்தார்கள். அன்றுதான் முதன்முதலாக முழுத்தொகையில் 50 சதவீதம் சென்ற்பற்றிக்ஸ் கல்லூரிக்குக் கொடுக்கிறதாகத் தெரிவித்தார்கள். மிகுதிப்பணத்தில் ஒருபகுதிதான் சிகிச்சைநிலையத்துக்குச் செலவும் தெரிவித்தார்கள். கூடியபகுதி கல்லூரிக்குக் கொடுக்கிறதைப்பற்றிப் பத்திரிகையில் போடாமல்விட்டதைப்பற்றியும் 11-6-77 இல் நடந்த கூட்டத்திலாவது இதைப்பற்றிச் சொல்லாமல் விட்டதையும் 28-6-77 இல் பத்திரிகையில் கண்டவுடன் திருத்தாமல்விட்டதையும் தங்கள் பிழையென்று ஒத்துக்கொண்டு உடனே பத்திரிகையில் திருத்தம் செய்கிறோம் என்று சொல்லிப்போனார்கள்.

(டாக்டர்)
க கனகரத்தினம்
யாழ். புற்றுநோய் சங்கத்தின் கௌரவ தலைவர்

# மகஜர் கையளிப்பு

அரியாலை, செவ்வாய்

அரியாலை காந்தி சனசமூக நிலையத் தூதுக்குழுவினர் நிலையத்தலைவர் திரு. த. இராமலிங்கம் தலைமையில் யாழ். மாநகராட்சிமன்ற விசேட ஆணையாளரையும் மாநகராட்சி ஆணையாளரையும் நேரில் சந்தித்து கிராமத்துக்கு செய்ய வேண்டிய மின்சாரம்-வீதி போன்ற வேலைகள் குறித்து மகஜர் ஒன்றை கையளித்தது.

தூதுக்குழுவினரின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக விசேட ஆணையாளர் உறுதியளித்தார். (உ)


H. N. C. E. 40 கட்டுரை மஞ்சரி
(உயர்தர வகுப்புக்குரியது)
தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சை [H. N. C. E.] யின் தமிழ்மொழி மையப் பாடத்திற்கு உதவும் வகையில் அமைந்த கட்டுரை நூல் இதுவொன்றே. மொழிநடை, பந்தியமைப்பு, விடயக் கட்டுக்கோப்பு முதலிய அம்சங்கள் பலவும் திறம்பட அமைந்தது. மொழியாற்றல் விருத்திக்கும் கட்டுரை வன்மை வளர்ச்சிக்கும் உற்றதுணையாய் அமைவது — 40 கட்டுரை மஞ்சரி.
விலை ரூ. 6-00
கிடைக்குமிடம்:
தனலக்ஷ்மி புத்தகசாலை,சுன்னாகம்.



யானைமார்க் குளிர்பான விற்பனையாளர்களுக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கும்
ஓர் அறிவித்தல்
இவ்விளம்பரத்தின்மூலம் எமது விற்பனையாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வது யாதெனில் கொம்பனியில் சோடா தட்டுப்பாடு காரணமாக,
ஜூலை மாதம் 19-ம் திகதியில் இருந்து ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி வரை எமது விற்பனை வாகனங்கள் சோடா விநியோகம் செய்யவரமாட்டாது. அத்துடன் எமது ஸ்தாபனத்திலும் சோடா விநியோகம் செய்யப்படமாட்டாது. எங்கள் ஸ்தாபனம் வரும் 1-ம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்பதையும் வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.
உரிமையாளர்:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
6689

# இந்திய ஜனதிபதி பதவிக்கு 22 பேர் போட்டி

## சிலர் கட்டுப்பணம் கூட கட்டவில்லையாம்

புதுடில்லி, ஜூலை 19

**இந்திய ஜனதிபதி பதவிக்கு லோசபை சபாநாயகர் திரு. சஞ்சிவரெட்டி உட்பட இருபத்திரண்டு பேர் வேட்பு மனுக்களைத்தாக்கல் செய்துள்ளனர்.**

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதித்தினமான நேற்று வரை இந்த வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்திருந்த 22 பேரில் அநேகர் 2,500 ரூபா கட்டுப்பணம்கூட செலுத்தவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இன்னும் சிலரின் வேட்பு மனுக்கள் ஜனதிபதி தேர்தல் விதிகளுக்கு அமைய முன்மொழிந்து, வழிமொழியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான இறுதி நாள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆகும். (இ)

## புதுச்சேரி ராஜ்சபை உறுப்பினர்

சென்னை, ஜூலை 19

பாண்டிச்சேரியின் ஒரே ஒரு ராஜ்யசபைஉறுப்பினர் பதவிக்கான காலி இடத்திற்கு அ. இ. அ. தி. மு. கவைச் சேர்ந்த திரு. வி. பி. முனுசாமி, ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. என். ராஜாராம் ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஏற்கனவே வேட்புமனு தாக்கல் செய்திருந்த அ. இ. அ. தி. மு கவைக் சேர்ந்த இன்னும் ஒருவர் வேட்புமனுக்களை விலக்கிக் கொள்வதற்கான இறுதிநாளான நேற்று தமது மனுக்களை வாபஸ்பெற்றுக் கொண்டார்.

வாக்கெடுப்பு இம்மாதம் 25-ம் திகதி நடைபெறும்

# கொள்ளையர் சிறையில் வதைக்கப்படுகின்றனராம்

நியூயோர்க், ஜூலை 19

கடந்த வாரம் நியூயோர்க் நகரில் திடீரென ஏற்பட்ட மின்சாரத்தடையை பயன்படுத்தி நடைபெற்ற கொள்ளைகள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள 3,200 பேரும் சிறையில்மனிதாபிமானமற்ற முறையில் நடாத்தப்படுகின்றார்கள் என நியூயோர்க் வழக்கறிஞர் சங்கம் அரசுக்கும் புகார் செய்துள்ளது.

கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு சீரான வைத்திய வசதிகள் வழங்கப்படவில்லை என்றும், அழுக்குணவுகள் பரிமாறப்பட்டு அவற்றை உண்ணுமயறு வற்புறுத்தப்படுவதாகவும், இவர்களுக்கு படுக்கை வசதிகள் அளிக்கப்படாமல் தரையில் படுக்குமாறு வற்புறுத்தப்படுவதாகவும் இப்புகாரில் குறிப்பிட்டுள்ளது. எனினும் இக் குற்றச்சாட்டுக்களை சிறைச்சாலை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

பலத்த இடிமுழக்கம் காரணமாக ஏற்பட்ட இம் மின்சாரத்தடையைப்பயன்படுத்தி கொள்ளையர்கள் கடைகளிலும், கம்பனிகளிலும், வீடுகளிலும் புகுந்து பல துணிகரக் கொள்ளைகளில் ஈடுபட்டனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஒரு விற்பனை நிலையத்தில் இருந்து 50 புத்தம் புதிய 'பொண்டியாக்' கார்களும் கடத்திச் செல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஹரிஜனரின் உயிருக்கு பாதுகாப்பு அவசியம்

## மொரார்ஜி முதல்வர்களுக்கு கடிதம்

புதுடில்லி, ஜூலை. 19

''ஹரிஜனர்களின் உயிரும் சொத்துக்களும் எந்தச்சந்தர்ப்பத்திலும் காப்பாற்றப்பட வேண்டும்''.

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் பீகார், உத்தரப்பிரதேச முதன்மந்திரிகளுக்கு எழுதிய கடிதங்களில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அண்மையில் பீகார்மாநிலத்தில் ஹரிஜனர்கள் பலர்கொலை செய்யப்பட்டது தொடர்பாக லோகசபையில் எழுப்பப்பட்ட கேள்விகள் தொடர்பாகவே பிரதமர் இக்கடிதங்களை அனுப்பியுள்ளார்.

ஹரிஜனர்களைக் கொடுமைப் படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசு தயங்கக்கூடாது என்றும் திரு. மொராஜி தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (இ)

# "இனத்தை வழிநடத்தும் தகுதி கூட்டணிக்கு கிடையாது,,

—வி. நவரத்தினம்

வண்ணுபாணை, செவ்.

"தமிழ் ஈழக் கோஷம் மூலம் மக்களை ஏமாற்ற நினைப்பவர்களே ஏமாற்றமடையப் போகிறார்கள்'' என்று ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழர் சுயாட்சிக்கழக வேட்பாளராகப் போட்டியிடும் கட்சித்தலைவர் திரு. வி. நவரத்தினம் அல்லைப்பிட்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. கே. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''ஆட்சிமன்றம் செல்வது ஒன்றே கூட்டணியினரின் இலட்சியமாக இருக்கிறது. மக்களை வழிநடத்தும் தகுதி இவர்களுக்கு கிடையாது.''

திருவாளர்கள் கோடீஸ்வரன் என். ஸ்ரீகாந்தா, செபஸ்ரியாம் பிள்ளை உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

# அணு ஆயுதம் அழிந்தாலே உலகில் அமைதி நிலவும்

## அமெரிக்க அதிபரின் அனுதாபமும் இதற்கு உண்டு என்கிறார் மொரார்ஜி

புதுடில்லி, ஜூலை. 19

அணு ஆயுதங்கள் யாவற்றையும் முற்றாக அழித்துவிடுவதே மனிதகுலத்தின் முதல்பெரும் கடமையாகுமென்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி வந்த கலிபோர்ணிய பேராசிரியர்கள் குழுவினரிடையே பேசுகையிலேயே திரு. மொரார்ஜிதேசாய் மேற்கண்டவாறு கூறினர்.

உலகின் பெரும் வல்லரசுகளான ரஷ்யாவும், அமெரிக்காவும் தம்மிடமுள்ள ஆயுதங்களை அழிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் மட்டுமே உலகில் அமைதி நிலவும் என்றும் திரு. தேசாய் கூறினர்.

### கார்ட்டரின் அனுதாபம்

இவ்விஷயத்தில் அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தமது கொள்கைக்கு அனுதாபம் தெரிவிப்பார் என்று தாம் நம்புவதாகவும் திரு. தேசாய் கூறினர்.

# வியட்நாமும் ஐ. நா. வில் இணையும்

நியூயோர்க், ஜூலை 19

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் வியட்நாமும் ஓர் அங்கமாக விரைவில் இணைந்து கொள்ளும்.

எதிர்வரும் செப்டம்பரில் ஐ. நா. மகாசபை கூடும் போது வியட்நாமும் ஐ. நா. வில் சேர்த்துக் கொள்ளப் படவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. நா. வில் வியட்நாமையும் சேர்த்துக் கொள்வதற்கு சிபார்சு செய்வதென்று நேற்றைய ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாம் இலங்கையர் என்ற எண்ணம் வேண்டும்

—எஸ். அலோசியஸ்

யாழ்ப்பாணம், புதன்

''நாம் அனைவரும் இலங்கை மாதாவின் புதல்வர்கள். நாம் இலங்கையர் என்ற எண்ணம் வலுப்பட வேண்டும். இந்த எண்ணம் கொண்ட ஐக்கிய இலங்கையை உருவாக்கவே நாம் ஐ. தே. க. வேட்பாளனாக இத்தொகுதியில் போட்டியிடுகிறேன்''

இவ்வாறு மானிப்பாய் தொகுதி ஐ. தே. க. வேட்பாளர் திரு. எஸ். அலோசியஸ் தம்மை ஆதரித்து மானிப்பாயில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினர்.

# தனிநாடு கோரிக்கை சாத்தியமற்றது

ஆர். என். சிவப்பிரகாசம்

அரியாலை, செவ்.

''தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அனைவரும் தேர்தலில் வெற்றிபெற்றாலும் கூட தனித்தமிழ்நாடு அமைப்பது அசாத்தியம்'' என்று நல்லூர்த் தொகுதி ஜி. ஜி. காங்கிரஸ் சார்பு சுயேச்சை வேட்பாளர் திரு. கே. இராமநாதனை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் ஜி. ஜி. காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசுகையில் கூறினர்.

வண்ணார்பண்ணை தட்டா தெருச்சந்தியில் திரு. மணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. சிவப்பிரகாசம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

''தமிழரசுக் கட்சியினர் காலத்துக்குகாலம் தம் கொள்கைகளை மாற்றிவந்துள்ளனர். மாவட்டசபை என்றும் சமஷ்டி என்றும் இவர்கள் கூறிவந்து இப்போது தனிநாடு என்கிறார்கள் இது சாத்தியமற்ற கோரிக்கை.''

ஜனப் நூர்முகமது உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

# சர்வோதய இயக்கத்தின் சேவைகளுக்குப் பாராட்டு

வேலணை, செவ்

''நாட்டில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்த சர்வோதய இயக்கம் தன்னால் இயன்ற சேவைகளைச்செய்து வருகின்றது. இதுபாராட்டுக்குரியது'' என்று புங்குடுதீவில் நடைபெற்ற சர்வோதயக்கருத்தரங்கில் தீவுப்பகுதி விவசாயப் போதனசிரியர் திரு. க. சிவக்கொழுந்து பேசுகையில் கூறினர்.

இக்கருத்தரங்கில் யாழ். விவசாயப்பகுதியைச் சேர்ந்த பல விவசாயப் போதனசிரியர்களும் கலந்து கொண்டு விவசாய அறிவுரை வழங்கினர்.

இக்கருத்தரங்கை வடபகுதி சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு ஏற்பாடு செய்திருந்தார். (உ)

## 8 கூப்பன்கள் யாருடையவை?

யாழ். லிடோ தியேட்டருக்கு முன்பாக 8 கூப்பன் புத்தகங்களைக் கண்டெடுத்து மார்ட்டின் வீதியைச் சேர்ந்த ச. மரியதாஸ் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்திருக்கிறார். உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

## அம்மன் மகிமை

சுழிபுரம், செவ்வாய்

அம்மன் மகிமையை விளக்கும் வகையில் அருட்கவி சீ. விநாசித்தம்பி ''வழக்கம்பரை ஸ்ரீமகாமாரியம்மை திருப்பதிகம்'' என்னும் நூலை எழுதியுள்ளார்.

இந்நூல் சுழிபுரம்- வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையாரால் வெளியிடப்பெற்றுள்ளது. (உ)

# "மானிப்பாய்த் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பேன்'

யாழ்ப்பாணம், செவ்வாய்

''மானிப்பாய்த் தொகுதியில் தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பித்து, இங்குள்ள படித்த வாலிபர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பளிப்பேன்.''

மானிப்பாய்த் தொகுதியில் தமிழ் ஈழ ஜி ஜி. காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு முதலியார் மானிப்பாயில் நடந்த கருத்தரங்கில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கனகராசா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. முதலியார் மேலும் கூறியதாவது: ''மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவும், பாடசாலைகளில் நவீன விஞ்ஞானகூடங்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுப்பேன்

''இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் உற்பத்தியாகும் சுருட்டை உலக நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்ய நடவடிக்கை எடுப்பதுடன், 12,000 சுருட்டுத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பேன்.''

### மணிவாசகம்

கோபமுண்டாகக் கூடிய காரணமுள்ள போதும் கோபியாதிருக்கும் ஒருவரே கோபத்தை வென்றவர் எனலாம்.

—காந்திமகான்

ஈழநாடு

THE EELANAADU

# தேர்தலும் ஐக்கியமும்

பொழுது விடிந்தால் பொதுத்தேர்தல்.

நாளைக் காலை எட்டு மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகும்.

ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் தங்கள் பொன்னான வாக்குகளை உபயோகிப்பதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

வாக்குப்பலத்தால் அமைதிப் புரட்சிசெய்யும் ஜனநாயக உரிமையுள்ள ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சமீபத்தில்தான் தேர்தல்கள் நடந்தன.

இந்தியாவில் ஆட்சிபீடத்தில் கடந்த முப்பதாண்டு காலமாக அமர்ந்திருந்த இந்திய தேசியக்காங்கிரசை ஆட்சியிலிருந்து அகற்றி ஜனதா கட்சி என்ற எதிர்க்கட்சிக்கூட்டணியை ஆட்சிபீடத்தில் அமர்த்தியிருக்கிறார்கள் இந்திய மக்கள்.

பாகிஸ்தானில் நடந்த தேர்தலில்பிரதமர்பூட்டோவின் மக்கள் கட்சி அமோக வெற்றியீட்டியது. ஆனால் அந்தத் தேர்தல் ஒழுங்கான முறையில் நடக்கவில்லையென்றும் அதில் ஊழல் நிறைந்திருந்ததென்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்து நடந்துமுடிந்த தேர்தலைச் செல்லுபடியாகாதென அறிவித்துப் புதிதாகத் தேர்தல் நடத்தவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். இதற்கு பூட்டோ மறுக்கவே அங்கு ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங்களும் நடந்து பல உயிர்கள் பலியானதுடன் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டது. இவற்றின் விளைவாக இன்று அங்கு இராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று அமைதியை நிலைநாட்டி ஒக்டோபரில் தேர்தல் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இந்திய, பாகிஸ்தான்தேர்தல்கள் இலங்கை உட்பட மற்றும் ஜனநாயக நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும்.

சென்ற சில தினங்களாக சிலஇடங்களில் பொலிசார் கைப்பற்றியிருக்கின்ற ஆயுதங்களைப் பார்க்கையில் அமைதியான தேர்தலுக்குப் பின்னணியில் வேறு சக்திகள் இயங்குகின்றனவா வென்று சந்தேகிப்பதற்கு இடமுண்டு.

என்றாலும் பொதுமக்கள் விழிப்புடனிருந்து, தேர்தல் அமைதியாக நடைபெறுவதுடன் தேர்தலுக்குப்பின்னரும் அமைதியைப்பேணுவதற்கு ஒத்துழைக்கவேண்டியது அவசியம்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் சிறு சிறுசம்பவங்கள் நிகழ்ந்துள்ளபோதிலும் பொதுவாக அமைதியாகவே இருக்கின்றது. இந்த அமைதியைத் தேர்தலின் பின்னரும் வடபகுதி மக்கள்நிலைநாட்டுவார்களென்று எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களின் உரிமைகளையே குறிக்கோளாக வைத்துத்தான் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலும் எல்லா வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். வெவ்வேறு பெயர்களைச் சொல்லிக்கொண்டாலும் இலட்சியம் ஒன்றேதான்.

ஒரே இலட்சியத்துக்காக பலர் மோதிக்கொள்வது வேடிக்கைமட்டுமல்ல, வேதனையானதும்கூட.

ஆனாலும் கடந்த ஒன்றரை மாதகாலமாகப் பிரசாரக் கூட்டங்களில் திட்டியதையெல்லாம் மறந்து தேர்தலின்பின்னர் வேட்பாளர்கள் ஒன்று சேர்ந்து மக்கள் அளிக்கும் தீர்ப்பை ஏற்று தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தை எடுத்துக்காட்டுவதற்கு முன்வருவார்களென்று நம்பலாம். தேர்தல் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தைக் குலைப்பதாக இருக்கக் கூடாது

## "பலமத ஒற்றுமைக்கு யாழ்ப்பாணம் முன்மாதிரி"

### முஸ்லிம்கள் மத்தியில் பெற்றோர் சங்கச்செயலாளர் உரை

யாழ்ப்பாணம், புதன்

"பல நூற்றாண்டுகளாக இந்துக்களும், இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகிறார்கள்: நாங்கள் யாபேரும் மிக ஒற்றுமையாக சகோதரமனப்பான்மையுடன் தமிழ் பேசும் ஓரினமாகவே வாழ்ந்து வருகிறோம் இப்படியான சகோதர மனப்பான்மை நாட்டின் வேறெந்தப் பகுதிகளிலும் பார்க்கயாழ்ப்பாணத்திலேயே அதிகமாகக் காணலாம்'

இவ்வாறு சட்டத்தரணியும் யாழ்.பெற்றோர் சங்கச் செயலாளருமான திரு.சி. பொன்னையா யாழ்.முஸ்லிம் வட்டாரத்தில் மானிப்பாய் வீதி-ஜின்னா வீதிச் சந்தியில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. பொன்னையா மேலும் சொன்னதாவது, "புத்தளம் அம்பாறை, கல்முனை, மன்னார் முதலாய இடங்களில் வாழும் முஸ்லிம் மக்களும் இனப்பாகுபாட்டினால் வரும் இன்னல்களைத் தவிர்க்க முடியாதவர்களாய் இன்று ஏனைய தமிழ்ப் பேசும் மக்களுடன் ஒற்றுமைப்பட்டுத் தனிஅரசு அமைப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து வருகின்றனர் தமது சுதந்திரத்தையும், சகல உரிமைகளையும், மானத்தையும் காக்க இதுதான் ஒரேயொருவழி என்பதை அவர்கள் உணர்ந்துவிட்டனர்".

தமிழ்ப்பேசும் மக்களது, விசேஷமாக இளைஞர்களது எழுச்சியைப் பாராட்டிய அவர் தமிழ் இனம் சகல வித்தியாசங்களையும் குறைபாடுகளையும் அகற்றவேண்டிய அவசியத்தையும் எடுத்துக் காட்டினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மாவைசேனாதிராசா, ஓமார் ஆசிரியர், சட்டத்தரணி ஆர் விசுவநாதன் உட்படப் பலர் உரையாற்றினர். கூட்டத்துக்கு எம். எஸ். ஏ.எம்.இராஜா தலைமை வகித்தார். (அ)

## 'அரசியல் விவேகமற்ற கோரிக்கை'

உடுப்பிட்டி, செவ்.

'தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மத்தியில் இன்று ஒற்றுமை இல்லை. இக்கூட்டணியில் ஒருவராக இருந்தவர்களே தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடுகின்றனர். இவர்கள் எப்படித் தமிழ் ஈழம் அமைத்து ஆட்சிசெய்ய முடியும்?'

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் உடுப்பிட்டிக் கிராமசபைத்தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கட்டைவேலிக் கிராமசபைத் தலைவர் திரு. வே. பாலசிங்கம் குறிப்பிட்டார்.

கரணவாய் தெற்கு கரும்பையடி அம்மன் ஆலயத்திற்கண்மையில் திரு. க. செல்லப்பா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு பாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

'இத்தேர்தலைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்துத் தமிழ்மக்கள் மத்தியில் நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்பு என்று கூறுகின்றனர். இப்பிரசாரம் தவறானதும், அரசியல் விவேகம் அற்றதுமாகும்'.

திரு. ஆர். ஆர். தர்மரத்தினமும் பேசினார். (உ)

# தமிழ்ஈழம் காண போராடத்தயாரா?

## குமார் கேட்கிறார்

யாழ்ப்பாணம், புதன்

"தனி நாட்டைப் பேச்சுவார்த்தைகள் மூலம் பெறமுடியாது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனி நாடு தான் எமது இலட்சியம் பேச்சுவார்த்தைகளால் எமக்குப் பிரயோசனம் இல்லையென்று கூறியுள்ளனர். இரண்டாவது இலங்கையில் ஏனைய கட்சிகள் எதுவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனி நாடு தருவதாகக் கூறவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பேச்சுவார்த்தைக்குத் தயாரில்லையென்றால் போர் மூலமாகத்தான் தனி நாடு பெறவேண்டும். அப்படியென்றால் அகிம்சையைப் பேசுகின்ற கூட்டணி போருக்குத் தயாரா? அப்படி ஒரு போர் நிகழ்ந்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ள தமிழர், இஸ்லாமியர்களது நிலையென்ன? போர் நடத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன ஆயத்தம் செய்துள்ளனர் என்பதை இந்தப் பொதுத் தேர்தலுக்கு முன் மக்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இல்லையேல் மக்களது வாக்குகளைப் பெறுவதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தந்திரம் செய்கின்றனர் என்றே கருதவேண்டும்."

இவ்வாறு கொட்டடியில் திரு. செல்லப்பா ஜெயபதி தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் யாழ்ப்பாணத் தொகுதிச் சுயேச்சை வேட்பாளரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (குமார்) குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ்க் காங்கிரஸ்கட்சி 1944ல் ஆரம்பமானதிலிருந்து ஐக்கிய இலங்கை. சம அந்தஸ்து என்ற கொள்கையுடன் தான் இயங்கிவருகிறது.

"நான் 1977 பெப்ரவரி 22ந் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் நியமனம் கோரினேன். அப்போதிருந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கேட்டுவந்துள்ளேன். அது கிடைக்கவில்லை. எனக்குக் கூட்டணி நியமனம் தந்திருந்தால் நான் கூட்டணிக்கு எதிராக இன்று கேட்கும் கேள்விகளைக் கேட்கமாட்டேனென்று பலர் சொல்லுகின்றனர். ஆனால் கூட்டணி எனக்கு நியமனம் தந்திருந்தாலும் இந்தக் கேள்விகளைக் கேட்டுத் தெளிவுபெறாமல் இருந்திருந்தால் கூட்டணி நியமனத்தை விட்டுவிட்டுச் சுயேச்சையாகவே கேட்டிருப்பேன்.

"தமிழ் ஈழத்திற்காகப் போராடுபவர்கள் தாம் வென்றாலும் தோற்றாலும் தமிழ் ஈழத்திற்காகவே போராடுவார்களா? அல்லது சில சலுகைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முன்வருவார்களா? ஏனென்றால் 15,000 அதிக வாக்குகளால்தான் வெல்வேன் என்று கூறும் யாழ்ப்பாணத் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் சில நிமிடத்திற்குள்ளாகவே தான் தோற்றாலும் யாழ்ப்பாணத் தொகுதி மக்களுக்கு உதவுவேன் என்று ஒரு கூட்டத்தில் கூறியுள்ளார்.

மக்களுக்குச் சில சலுகைகளைச் செய்ய இவர் முன்வருவாரா? ஏனென்றால் மற்றைய தொகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி வென்றால் வேலைவாய்ப்பு முதலிய சில சலுகைகளை அவர்கள் பெற்றுத்தருவாரென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

"கொழும்பு மத்தியில் திரு. செல்லச்சாமி வென்றால் தமிழர் இருக்கமுடியாதென்று எழுதி வைத்துள்ளனர். இது ஏன் ஏற்பட்டது? தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தென்னிலங்கைத் தமிழர்களது கருத்துக்களையும் கேட்காததால்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தென்னிலங்கைத் தமிழர்களது கருத்துக்களைக் கேட்க விரும்பாதது ஏன்? அவர்கள் தமிழ் ஈழக் கோரிக்கையை ஏற்கமாட்டார்கள் என்றதினாலா?"

சட்டத்தரணி திரு. ஜிம்மி இராசரத்தினம் பேசுகையில்

"நான் சிங்களவனாக இருந்தால் தமிழ் ஈழத்தை உடனே கொடுக்கச் சொல்லிவிடுவேன். ஏனென்றால் மூன்றும் மாதம் தமிழ் ஈழம் திரும்பவும் ஒன்று சேர ஐக்கிய இலங்கைதான் ஏற்படும்" என்றார்.

திருவாளர்கள் ஆர். ஈ. ஆனந்தராசா, எஸ். சொல்வேந்தன், கே. கதிர்காமநாதன், புதுமைலோலன், ஜனாப் ஏ. அன்வர் உட்படப் பலர் உரையாற்றினர். (கூ)

## 'கச்சாய் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வேன்'

### -வி. குமாரசாமி

யாழ்ப்பாணம், புதன்

'நான் எம். பியாக இருந்த போது தென்மராட்சி கிழக்குப் பகுதிக்கு, மின்சாரமும் குழாய் நீர் திட்டமும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தேன். ஆனால் இதுவரை அத்திட்டம் பூர்த்தியாகவில்லை. நான் எம். பியாகத் தெரிவுசெய்யப்பட்டால் அத்திட்டத்தைப் பூர்த்திசெய்வேன்'.

கொடிகாமம் சந்தையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு.வி. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ். எம். கமலநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. வி. குமாரசுவாமி மேலும் கூறியதாவது;'கச்சாய் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து, அங்கிருந்து பூநகரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் படகுசேவையை ஆரம்பித்து இப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்குவேன். இப்பகுதியில் மகா வித்தியாலயம் இல்லாத குறையைநீக்கி, மாணவர்கள் தங்கள் சொந்தக் கிராமத்திலேயே உயர்கல்வி பெறும் வாய்ப்பை அளிப்பேன்.

தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசும்போது, தலைவர் ஜி. ஜி. யின் லட்சியங்களை நிறைவேற்றுவதும், அவரின் கொள்கையைப் பின்பற்றி நடப்பதும். நமது நோக்கமாகும் என்றார்.

திருவாளர்கள் ஆர். ரி. சுப்பிரமணியம், ந பரமசிவம், 'புயல்' பரராஜன், செல்வன் யோ. கிரிதரன் ஆகியோரும் பேசினார்கள்.

## "இஸ்ரேலியர் போன்றுநாமும் நாட்டை வளப்படுத்துவோம்"

யாழ்ப்பாணம், புதன்

'விவசாயத்தில் ஈடுபட்டு புதுயுகம் காணுவீர்' என்றுமாந்தைப்பகுதி அடம்பன் மகா வித்தியாலயத்தில் விவசாயப் பயிற்சிநெறி முடிவடைந்து வெளியேறும் மாணவமாணவிகள்அளித்தவிருந்துபசார வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மாந்தை கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா அறைகூவல் விடுத்தார். இவ்வைபவத்திற்கு அடம்பன் மகா வித்தியாலய அதிபர் திரு. மு. சின்னையா தலைமை வகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இங்கு பெற்ற விவசாயப் பயிற்சி உங்களை எதிர்காலத்தில் சிறந்த விவசாயிகளாக்குவதற்கு வழிகோலியுள்ளது. பண்டைய வரலாற்று நூல்கள்,மாந்தை ஒருசிறந்த துறைமுகமாக விளங்கிற்று என்று கூறுகின்றன. பிற நாட்டுக் கப்பல்கள் பெருமளவில் வந்திருந்தன என்பதற்கு 'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்' என்று திருக்கேதீஸ்வரப் பதிகத்திலுள்ள பாடல் வலியுறுத்துகின்றது. சோழர் ஆட்சிக்காலத்தில் மாத்தையிலிருந்து மரக்கலங்களில் நெல் ஏற்றுமதியானதென்று வரலாறு சான்று பகர்கின்றது. பொருளாதாரத்துறையில்மீண்டும் அந்நிலை ஏற்பட இளைஞராகிய நீங்கள் அயராது உழைக்கவேண்டும்.

'மன்னார்ப்பகுதியில் குழாய்க் கிணறுகள்மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ற வசதிகள் உண்டு. முருங்கன், கருங்கண்டல் பகுதிகளில் குழாய்க்கிணறுகள் பெருவெற்றி அளித்துள்ளன. மிகவும் வரண்ட பிரதேசமாகிய இஸ்ரேல் நாட்டில் குழாய்க் கிணறுகள் மூலமாகவே நீர்ப்பாய்ச்சி வளங்கொழிக்கும் நாடாக மாற்றினர். அவர்களைப்போன்று நாமும் தன்னம்பிக்கையோடு முயற்சிசெய்து பொருளாதாரத் துறையில் தன்னிறைவுகண்டு புதிய யுகம் காண்போம்".

விழா இறுதியில் மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (அ)

# கண்டியைக் கேட்கவில்லை நமது பகுதியையே கேட்கிறோம்

## யாழ். முற்றவெளிக் கூட்டத்தில் சூசைதாசன் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

"காண்டீபனுக்கு இந்தியாவிலிருந்து லண்டனுக்கு செல்ல விமானடிக்கட் பெற்றுக் கொடுத்தபடியால் தான் எனக்கு மன்னாரில் போட்டியிட கூட்டணி டிக்கட் கிடைத்ததாக திரு. குமார்பொன்னம்பலத்தின் ஆதரவாளர்கள் கூறி வருகிறார்கள். இந்த தியாகத்தைச்செய்ய எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்றுதான் துக்கப்படுகிறேன்."

யாழ். முற்றவெளியில் நடந்த தமிழர்விடுதலைக் கூட்டணி எழுச்சிக்கூட்டத்தில் பேசிய மன்னார்த்தொகுதி கூட்டணிவேட்பாளர் திரு. சூசைதாசன் மேற்கண்டவாறுகூறினார்.

திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. சூசைதாசன் மேலும் கூறியதாவது:-

"இப்படியான ஒரு தியாகத்திற்காகநான்ஒருடிக்கட்அல்லது 5 டிக்கட்கேட்டாலும் அதனைக் கொடுக்கத்தயாராக இருக்கிறேன். அந்தப்பாக்கியம் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. அப்படியான சந்தர்ப்பம் கிடைத்தால், டிக்கட் வழங்கத்தயாராக இருக்கின்றேன்.

### எல்லையைக் காப்போம்

"இந்த ஜனசமுத்திரத்தைப் பார்க்கும் போது 21-ம் திகதி முடிவு ஏற்கனவே வெளியாகிவிட்டதாக தோன்றுகிறது எங்குபார்த்தாலும் மாவிலை தோரணங்களும் மஞ்சள் குங்குமமும், மகத்தான வரவேற்புகளையும் காண்கிறேன். தமிழ் ஈழ எல்லையைக் காப்பாற்றி தேசிய அரசுப்பேரவையில் 25 கூட்டணி வீரர்களும் இருக்கப்போகிறார்கள். கொழும்பு வாழ் தமிழ்மக்கள் இவ்வளவுகாலமும் வேறு ஒருவரை ஆதரித்தனர் இம்முறை திரு. செல்லச்சாமியையே ஆதரிப்பதென உறுதி பூண்டுவிட்டனர்.

தமிழர் சரித்திரம் கண்டறியாத கூட்டம் இது. இங்கிலாந்தில் இருந்தபோது, ஈழத்தமிழர் பிரச்னையை உலகத்தமிழர் யாவரும்அறியச்செய்தேன் அப்போது திரு. யோகேஸ்வரனும் என்னுடன் ஒத்துழைத்தார். லண்டனில் கட்டப்பொம்மன் படத்தை திரையிடச்செய்தோம். அச்சமயத்தில் திரு. குமார் பொன்னம்பலமும் அங்குபாரிஸ்டருக்குப் படித்துக் கொண்டிருந்தார். தமிழர்பிரச்னைபற்றி அவர் சிந்திக்கவே இல்லை. லண்டனில் தமிழ் சங்கம் அமைத்து தமிழ் ஓசை பரப்பச்செய்தோம்!

சிங்கள கட்சிகளைநாம் இனிமேலும்நம்பிஏமாறத்தயாராக இல்லை. நாம் நமது நாட்டைத்தான் கேட்கிறோம் ஒட்டி வாழ்ந்ததுபோதும் இனிமேல் வெட்டிவாழ்வோம்.

### கண்டியைக் கேட்கவில்லை

இந்நாட்டின் கடைசி தமிழ் மன்னன் ராஜசிங்கன் ஆண்ட கண்டிப்பிரதேசத்தை நாம் கேட்கவில்லை. எல்லாளமன்னன் ஆட்சி புரிந்து அநுராதபுரத்தை நாம் கேட்கவில்லை. தமிழர் பரம்பரையாகவாழ்ந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களைத்தான் கேட்கிறோம். நாம் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது.

யாழ்ப்பாணம் கூட்டணி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன் கூறியதாவது: பெண்மணிகளுக்கு அரசியலில் ஆர்வம் ஏற்பட்டிருப்பது நல்ல அறிகுறி இங்கு திரண்டிருக்கும் பெண்மணிகளை பார்க்கும்போது நாங்கள் தமிழ் ஈழம் அடைந்தே தீருவோம் என்பது உறுதியாகி விட்டது.

நமது அணி திட்டவட்டமான முடிவை அரசுக்கும், உலகிற்கும் எடுத்துக் காட்டும் தமிழர் சரித்திரத்தில் இது ஒரு முக்கியமான தேர்தல் இத்தேர்தல் மூலம், தமிழ் மக்கள் சுதந்திர இனமாக வாழ முடிவு செய்துவிட்டதென்பதை உலகிற்கு காட்டப் போகின்றது.

யாழ்ப்பாணத் தொகுதியில் எந்த தகுதியால் தான் கூட்டணி அபேட்சகராக நிறுத்தப்பட்டேன் என்று எதிர்க்கட்சி நண்பர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். 1954ம் ஆண்டு முதல், லண்டனிலும், பாரிஸிலும் இருந்துதமிழினத்திற்காக அயராது உழைத்து அங்குபல போராட்டங்களில் ஈடுபட்டேன். லண்டன் தமிழ் சங்கத் தலைவராக ஏழு ஆண்டுகள் கடமையாற்றி அங்கு வந்த இலங்கை பிரதமருக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினேன். தனிச் சிங்கள சட்டத்தை வாபஸ் பெறுமாறு வற்புறுத்தினோம். பின் இலங்கை திரும்பி தமிழரசுக்கட்சியில் சேர்ந்து உழைத்தேன் பின் தமிழர் கூட்டணி நடவடிக்கை குழு உறுப்பினராக கடமையாற்றினேன். கவிஞர் காசி ஆனந்தன் சிறை சென்ற போது, தற்காலிக இளைஞர் பேரவை தலைவராக கடமையாற்றினேன். தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம் தொடர்பாக நடந்த விசாரணை கமிஷன் செயலாளராக பணியாற்றியதுடன், செம்மணி பரராசா துப்பாக்கி சூட்டு வழக்கிலும் மற்றும் சட்டத்தரணிகளுடன் நீதிக்காக வாதாடினேன். இப்படியாக பின்னணியில் நின்று தமிழினத்திற்கு தொண்டாற்றிய என்னை தகுதிபற்றி கேட்கின்றார்கள், இவ்வளவு காலமும் பின்னணியில் நின்று பணியாற்றிய எனக்கு முன்னணியில் நின்று பணியாற்றி ஒரு சந்தர்ப்பம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.


### உலகமே அதிசயித்தது

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் கூறியதாவது: சுதந்திர முதலாக தமிழ் நாடே நமக்கு விமோசனம் தரும் என 67-ம் ஆண்டு கூறியதாக என்னுடன் போட்டியிடும்சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. நவரத்தினம் கூறுகின்றார். அப்படிக் கூறியபடியால் தான்ஒரு தீர்க்கதரிசி என்று கூறியிருக்கிறார்.

அப்படியானால் 1956-ம் ஆண்டு தனித்தமிழ் நாடே ஒரே வழி எனக்கூறிய முன்னாள் வட்டு எம். பி. திரு. ஏ. தியாகராசாவும் ஒரு தீர்க்கதரிசிதான். அதன்பின் தமிழ் ஈழம் தான் ஒரே வழி எனக் கூறிய திரு. சுந்தரலிங்கமும் ஒரு தீர்க்கதரிசியாகத்தானே இருக்க வேண்டும்.

'தமிழ் ஈழத்தை சாதாரண பேர்வழி கூறினால் அதற்குப் பெறுமதியில்லை. அதை உலக மக்கள் பொருட்படுத்தமாட்டார்கள். ஆனால் லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைக் கொண்ட கூட்டணி 'தமிழ் ஈழ தீர்மானத்தை நிறைவேற்றிய போது தான் சிங்கள மக்கள் பயப்பட்டார்கள்; உலகமே அதிசயத்துடன் பார்த்தது ஒரு கருத்தை ஒருவர் கூறும் போது அவர் பின்னால் எத்தனை லட்சம் மக்கள் நிற்கின்றார்கள் என்பதைத்தான் உலகம் கணிக்கின்றது. அதனால்தான் 'தமிழ் ஈழம்' பற்றி நாங்கள் முடிவு எடுத்தபோதுதான், பரபரப்பு ஏற்பட்டுள்ளது அரசாங்கமே நடுங்கியது. அவசரகாலச்சட்டத்தை கொண்டு வந்து வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வெளியிடக் கூடாதென தடைசெய்தது. அத்தடையை மீறியதனால்தான் நாங்கள் ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டோம்."

மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களும் உரையாற்றினர்கள். (க)



வேலர்: நாளைக்கு நாம்பனுக்கு குறி சுடுகிறநாள்.
மயிலர்: என்ன வேலர் பேசிறாய்.
வேலர்: நாளைக்கு புள்ளடிக்குறி போடுறநாள்.
மணியர்: ஓ...நாம்பன்ரை குணமறிந்து குறிசுட வேணும்... சிலது குறுக்கே இழுக்கும்... சிலது விழுந்து கிடக்கும். சிலது கட்டை அறுத்துக்கொண்டோடும் ... விசுவாசமா உழைக்கிறதுக்கு குறியைச் சுடவேணும்

சுந்தர்

"கிராய்ப் பிள்ளையார் கோயில்

## 74-ம் ஆண்டே சமவழிபாட்டுக்கு திறந்துவிடப்பட்டது'

யாழ்ப்பாணம், புதன்

கரவெட்டி மேற்கு கிராய் பிள்ளையார் கோவில், 1974ம் ஆண்டே சிறுபான்மைத்தமிழருக்குத் திறந்துவிடப்பட்டது என கோவில் முகாமையாளர் வித்துவான் க.நடராசா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"கிராய் பிள்ளையார்கோவில் சிறுபான்மைத்தமிழருக்கு இன்னும் திறந்துவிடப்படவில்லை எனத் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணிச் செயலாளர் திரு. வி. ஆனந்தராசா, யாழ்ப்பாணத்தில் திரு. குமார் பொன்னம்பலத்தை ஆதரித்து நடந்ததேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கூறியிருந்தார். ஆனால் இக்கோவில் திரு. எம்.சிவசிதம்பரத்தின் முயற்சியால் 74ம் ஆண்டு பெப்ரவரி 6-ம் தேதி சகலமக்களுக்கும் சமமாக வழிபடுவதற்காகத் திறந்துவிடப்பட்டதென்பதை, கோவில் முகாமையாளர் என்ற ரீதியில் தெரிவித்துக்கொள்கிறேன்"

[க-அ]

## "22ம் திகதி அறிவுலகம் அகம்மகிழும்"

யாழ்ப்பாணம்: புதன்

"மொழிமீது பற்றுதல்இருக்கலாம். ஆனால்அதுவேபொய்ப் பிரசாரங்களை நம்பி வெறியாக மாறிவிடக்கூடாது" என்று காங்கேசன்துறை தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் சட்டத்தரணி திரு. சிவஸ்ரீதரன் அளவெட்டியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

இக்கருத்தரங்கு திரு. சி. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. ஸ்ரீதரன் மேலும் பேசுகையில், "தமிழ்மொழிதனித்துவம் மிக்கது. தமிழுக்கு, தமிழ் இனத்திற்கு ஆபத்து ஏற்படுவதை எவரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதற்காக மொழிவெறியை ஊட்டி பொய்ப்பிரசாரங்கள் மூலம் தமிழ்மக்களை பகடைக் காய்களாகப் பயன்படுத்த முனைவதை சகித்துக் கொண்டிருக்க முடியாது. எமக்கும் மொழிப்பற்று இனப்பற்றுதல் உண்டு தமிழ், தமிழ் என்று வரட்டுக் கூச்சலிட்டு எத்தனை காலம்தான் ஏமாற்றி தமிழர்களை பாலைவனத்திற்குக் கொண்டுசெல்ல முடியும்? தமிழர்கள் ஏமாளிகள் அல்லர். தூய்மையான, வலுவான, சாத்தியமான கொள்கை இல்லாமல் தமிழ், தமிழ் என்று, கூச்சலிட்டே வெற்றிபெறலாம் என்று எண்ணுவோருக்கு தமிழ்மக்கள் இத்தேர்தலில் தகுந்த பதிலளிக்கத்தான் போகிறார்கள் ஏமாற்றுப்பிரசாரம் எல்லாக் காலத்துக்கும் நிலைக்காது என்பதை அறிவுலகம் 22ம் திகதி அறிந்து அகம்மகிழத்தான் போகிறது" என்றார். (உ)

## சந்தேகநபர்கள் தலா ரூ.1000 பிணையில்

யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டையில் நடைபெற்றதாகக் கூறப்படும் சில அசம்பாவித சம்பவங்கள் தொடர்பான சந்தேகநபர்களை மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரட்ணம் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த ஏ. நவரத்தினம், ஏ. அன்னம்மா கே. இராசாத்தி ஆகியோர் தம்மை பயமுறுத்தியதாக இ. வெற்றிவேலாயுதம், கே. குலசிங்கம் என்பவர்களுக்கு எதிராகவும் இதேயிடத்தைச் சேர்ந்த ஏ. புண்ணியமூர்த்தி என்பவர் தம்மை மிரட்டியதாக பி. சிவசுப்பிரமணியம் என்பவருக்கும் எதிராகவும் சங்கானைப் பொலிஸார்செய்து கொண்ட புகார்களையடுத்து சந்தேக நபர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இச்சந்தேக நபர்கள் மீண்டும் நேற்று நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

சட்டத்தரணி திரு. கே. குணரத்தினத்தின் கோரிக்கையை ஏற்று சந்தேக நபர்களைத் தலா 1000 ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்து விசாரணையை ஒத்திவைத்தார்.

மேற்படி சம்பவங்களுக்கு அரசியல் கருத்து வேறுபாடே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

பெரும்பான்மைக் கட்சி

## வெற்றிபற்றி எமக்கு அக்கறை இல்லை

—மு. திருநாவுக்கரசு

சுன்னகம்,செவ்வாய்

"மக்கள் காட்டிவரும் பேரார்வத்தில் இருந்து கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெறுவர் என்பது புரிகிறது. எனினும் வாக்காளர்கள் சிரமத்தைப்பாராது தேர்தல் தினத்தன்று வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கத் தவறக் கூடாது".

இவ்வாறு மானிப்பாய் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் தம்மை ஆதரித்து சுன்னகம் சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. ஏ. தம்பிப்பிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது "பெரும்பான்மை இனக்கட்சி எது என்பதல்லக் கேள்வி தமிழ்ஈழத்தில் உதயமாகப்போவது கூட்டணியின் உதயசூரியன் தான் என்பதை உலகறியச் செய்ய வேண்டும் என்றார்." (உ)

தீவுப்பகுதியில்

## விதை வெங்காயம் பகிர்ந்து விநியோகம்

வேலணை, செவ்வாய்

விவசாயப் பகுதியினருக்குக் கிடைக்காமலிருக்கும் விதை வெங்காயம் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று தீவுப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. க.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் வெங்காயச் செய்கை பண்ண முற்படும் விவசாயிகள் விதை வெங்காயம் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் சொற்ப அளவிலேனும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# "மக்கள் சேவைக்காகவே தேர்தலில் நிற்கிறார்"

## டாக்டர் ஏபிரகாம் பற்றி பாலசிங்கம்

யாழ்ப்பாணம், புதன்

"திரு. குமார் பொன்னம்பலம்தான் என்னை யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடுமாறு கூறித் தானும் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடப் போவதாகச் சொன்னார். பின்னர் அவர் என்னுடனே வந்து போட்டியிடுகின்றார்".

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளரான டாக்டர் ஏபிரகாம் நாவாந்துறையில் தமக்குஆதரவாக திரு. தொ. குசைப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"யாழ்ப்பாணத் தொகுதி கரையோரப்பகுதி மக்களது பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதற்காகவே அமைக்கப்பட்டது என்பதை தொகுதிநிர்ணயக் குழு அறிக்கையில் காணலாம். தமிழரசுக்கட்சியினர் அமரர் ஜி. ஜி. யைத் தோற்கடிப்பதற்காக 1965ல் எங்கேயோ இருந்த திரு.சி.எக்ஸ். மார்ட்டினைக் கொண்டுவந்து கரையோரமகன் என்று அறிமுகப்படுத்தி 1970ல் தோற்கடித்தனர். என்னைத்தகுதியற்றவன் என்று திரு. மு. சிவசிதம்பரம் கூறிவருகின்றார். காங்கிரஸ் செயற்குழுக்கூட்டத்தில் என்னை யாழ்ப்பாணத் தொகுதிக்கும், குமாரைப்பருத்தித்துறைத் தொகுதிக்கும் நியமிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டபோது அக்கூட்டத்தில் திரு. மு. சிவசிதம்பரம் இருந்தார். இப்போது தகுதியில்லையென்று கூறுபவர் அப்போது ஏன் கூறுமல் இருந்தார்.

"நான் தேர்தலில்வென்றால் யாழ். தொகுதி மக்களுக்குப் பாரபட்சமற்ற சேவை செய்வேன். இந்தப் பகுதியில் வாழும் கடல்தொழிலாளர்களது முன்னேற்றத்தை முதன்மையாகக்கொண்டு சேவைபுரிவேன்".

ஈச்சமோட்டை எஸ். பாலசிங்கம் பேசுகையில், "துரையப்பா யாழ்ப்பாணத்திற்கு எப்படிச் சேவை செய்தாரோ அதைப்போல சேவை செய்ய வந்தவர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம். அவர்தேர்ந்தெடுத்திருக்கும் தராசுச் சின்னம் போல எவர் மீதும் பாரபட்சம் காட்டாதவராக அவர்விளங்குகின்றார். நல்லதையே செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்குடன் தான் அவர் இத்தேர்தலில் போட்டியிட முன்வந்தார். அவருடைய நல்ல குணங்களை சேவை புரியும் ஆற்றலை அவருடன் ஒருவர் இரு நிமிடங்கள் பழகியவுடனேயே புரிந்து கொள்ளமுடியும். அவர் எந்த நேரமும் தொகுதி மக்களுக்குச் சேவை செய்வதற்காக யாழ்ப்பாணத்தொகுதியிலேயேஇருப்பார். மக்கள் எந்தத் தரகர்களுமில்லாமல் அவரை நேரே கண்டு தங்கள் பிரச்னைகளைச் சொல்லித் தீர்வு பெறலாம்" என்றார்.

செல்வி பத்மசேகரி இரத்தினம், ஜனாப் எஸ். றபீக்உட்பட பலர் உரையாற்றினர். (கூ-அ)



## கோப்பாய் கல்வி அதிகாரி

மன்னார்த் தொகுதி மாந்தைப் பகுதியில் கல்வி அதிகாரியாகக்கடமையாற்றிய திரு.வி. தங்கராசா இம்மாதம் 15-ம் திகதி முதல்கோப்பாய்க் கல்வி அதிகாரியாக மாற்றம் பெற்றுள்ளார்.

மாந்தையில் சேவை ஆற்றிய காலத்தில் முஸ்லிம்கள், கிறீஸ்தவர், இந்துக்கள் என்ற பாரபட்சமின்றி, தன்னலமற்ற சேவையினால் எல்லா மதத்தினராலும் "புண்ணியம்" மிக்க மதிப்பையும், பாராட்டையும் பெற்ற இவர், அன்னைப் பகுதி கோவில்கடவையை வசிப்பிடமாகக் கொண்டவர். (அ)

# 'தமிழர்வாழ்வோடு இணைந்தது கூட்டணி'

## —த. இராஜலிங்கம்

உடுப்பிட்டி, செவ்,

"தமிழர்விடுதலைக்கூட்டணி தமிழர் வாழ்வோடு இணைந்த ஒரு இயக்கமாகி விட்டது" என்று உடுப்பிட்டித்தொகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. த. இராஜலிங்கம் கரணவாய் தெற்கில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

"எதிர்காலத்தில் நாமும் வருங்காலத் தலைமுறையினரும் சுதந்திரமாக வாழ இப்போதே நாம் வழி வகுத்துக்கொள்ள வேண்டும். இதற்கான முடிவு எதிர்வரும் பொதுத் தேர்தலில் தெரிந்து விடும். தமிழ் மக்களிடையே ஒருமைப்பாடு நிலவவேண்டும் என்பதே எமது இலட்சியம். சாதி வேற்றுமையை ஒழிப்பதற்காகப் போராடிய இடதுசாரிகள் இன்று சிறுபான்மைத் தமிழரை எதிர்த்து போட்டியிடுகின்றனர். இதுதான் இடதுசாரிகளின் கொள்கையா" என்றார்.

தமிழர்விடுதலைக்கூட்டணிச் செயல்அதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"தமிழர் விடுதலைக்கூட்டணி உலகத்தமிழர் இயக்கமாக இன்றுவளர்ந்துவிட்டது. 33க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் தமிழர்கள் எமது ஒற்றுமையை வலுவடையச் செய்யவேண்டும். தமிழர் இணைந்து போராடுகின்ற இவ்வேளையில் எங்களுக்குள் பேதம் இருக்கக்கூடாது"என்றார்.(உ)

# "உரிமைகளை மீளப்பெற இதய சுத்தியுடன் போராடவேண்டும்"

## — வ. நவரெத்தினம்

ஊர்காவற்றுறை, செவ். டார்.

'தமிழ்மக்களாகிய நாம் நமது இழந்துபோன உரிமைகளை மீண்டும்பெறுவதற்கும், தனித்தமிழ் நாட்டை அமைத்துக்கொள்வதற்கும் இதயசுத்தியுடனும் சுதந்திர உணர்வுடனும் போராடவேண்டும். வெறும் காகிதப்போராட்டங்களாலும். வாய்ப்பேச்சினாலும் தனிநாட்டைப் பெறவே முடியாது.'

மேற்கண்டவாறு வேலணை பஸ்கொம்பனிச்சந்தியில் தம்மை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தமிழர் சுயாட்சிக்கழகத்தின் தலைவர் திரு. வ. நவரெத்தினம் குறிப்பிட்டார்.

திரு. பொ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரெத்தினம் மேலும் பேசுகையில், 'நான் இத்தொகுதியின் எம். பியாக இருக்கும்போது பின்தங்கிய தீவுப்பகுதியை முன்னேற்றுவதற்குப் பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வந்தேன். அதனால் தீவுப்பகுதி மக்கள் என்மீது குறைகாண இடம் இல்லாதுபோய்விட்டது எதிர்காலத்தில் இப்பகுதியின் எம். பியாக நான் தெரிவு செய்யப்பட்டதும் தமிழ்மக்கள் கூடுதலான பயனைப்பெற இப்பகுதி மக்கள் வழிஅமைத்தவர்களாவார்கள்' என்றார்.

இக்கூட்டத்தில் சட்டத்தரணி த. ஸ்ரீகாந்தா, திரு.ப. சண்முகநாதன் உட்பட பலர் உரையாற்றினார்கள். (அ)

...

# 'வெற்றிபெறுவதில் சந்தேகமில்லை'

## — வி. தர்மலிங்கம்

சங்கானை, செவ்.

"தமிழ் மக்கள் பெரும்பான்மையினரின் ஆட்சிகளை நம்பி தங்கள் பிரசனைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்ற உண்மையை நன்கு உணர்ந்துவிட்டார்கள். இதனையடுத்தே எதிர்வரும் தேர்தலை தமிழ்ஈழம் அமைப்பதற்கு ஒரு சர்வஜனவாக்கெடுப்பாகக் கணித்துள்ளோம்".

இவ்வாறு மானிப்பாய்த் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. வி. தருமலிங்கம் சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலடியில் நடைபெற்ற 15ம் வட்டார தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு .வ. செல்லத்துரை தலைமையில் நிகழ்ந்த இக்கருத்தரங்கில் மேலும் திரு.தருமலிங்கம் பேசுகையில் "நாடு சுதந்திரம் அடைத்த பின் மாறிமாறி வந்த இரு அரசாங்கங்களும் பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டம் நடத்தியும் மொழி உரிமை கல்வி போன்றவற்றில் தமிழரைப் புறக்கணித்தும் வந்துள்ளன.

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வெற்றி பெறுவது நிச்சயம். ஆனால் வெற்றியீட்டுவதல்ல எங்கள் குறிக்கோள். இந்த வெற்றி ஒவ்வொரு தொகுதிகளிலும் எத்தனை ஆயிரம் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்துள்ள தென்பதை சிங்கள அரசும் உலக நாடுகளும் அவதானிக்க வேண்டும் என்பதேயாகும்.

ஜப்பான், ரஷ்யா, அமெரிக்க போன்ற அன்னிய நாடுகள் தமிழர்விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அறியும் அளவிற்கு நிலைமை வந்துள்ள போது இந்தத் தேர்தலை நன்கு பயன்படுத்தி தமிழ் ஈழம் அமைப்பதற்கு ஏகோபித்த அதிகப்பெரும்பான்மை வாக்குகளை உதய சூரியனுக்கே இடல் வேண்டும்"என்றார்.(உ)

# அமிருக்கு கிரீடம் சூட்டினர்

மாவிட்டபுரம்,செவ்.

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு தெல்லிப்பழையில் நடந்த பிரசாரக்கூட்டமொன்றில் வைத்து கிரீடம் சூட்டப்பட்டது.

காங்கேசன்துறைத் தொகுதி வேட்பாளரான அவரை ஆதரித்து தெல்லிப்பழை கூட்டுறவுவைத்திய சாலைக்கருகாமையில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் வைத்தே இக்கிரீடம் சூட்டப்பட்டது.

உலோகத்தினாலான வேலைப்பாடுகள் கொண்ட உதய சூரியன் பொறிக்கப்பட்ட இக்கிரீடத்தை திரு.அமிர்தலிங்கத்திற்கு சூட்டியதும் மக்களின் மகிழ்ச்சிக் கரகோஷம் வானைப் பிளந்தது.

அக்கிரீடத்தை அவர் கழற்றி வைத்துவிட்டு பேச முயன்றபோது மக்கள் கழற்ற வேண்டாமென கோரிக்கை விடுத்தனர். மக்களது அன்புக் கட்டளையை மறுக்க முடியாது அவர் கிரீடத்துடனேயே நின்று பேசினார் மாலைகள் மலைபோல் குவிந்து கிடந்தன. (அ)



இதயத்தைத்தொடும் வேளைகளுக்கு இதமான பாதணிகள்

பாட்டாவின் செருப்புக்கள், சான்டல்கள், சப்பல்ஸ் ஆகியனவற்றில் சௌகரியமாக, எழிலாக, அழகாக அசைந்து திரியுங்கள் ... இறகு போன்று இலகுவானவை சறுக்காத அடித்தளங்கள் ... புரட்சிகரமான வர்ணங்கள், மோஸ்தர்கள் ... அநாயாசமாகத்துள்ளித்திரியும்இதயங்களுக்கு ... நவீன மோஸ்தர்களில் பாதணிகள் ... பாட்டாவிடமிருந்து.

பாட்டா

வளமான மண், தெளிந்த நீர், சுத்தமான காற்று, சுதந்திரமான விலங்கினம், குப்பையிடாதீர்.

Bata

**REGAL** (JAFFNA) Daily at 4-45, 7-00 & 9-30 p.m. only

**MISSION TO KABUL**

War Film

(Scope-Color)

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ரவிச்சந்திரன் - ஜெய்சித்ரா

**அக்கரைப்பச்சை**

வெகு விரைவில் வருகிறது

எம். ஜி. ஆர் — லதா நடித்த

**உழைக்கும் கரங்கள்**

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர். - பத்மினி - நம்பியார்

**ராணி சம்யுக்தா**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) சிவராம், கீதாஞ்சலி, ர்மலிங்கம், ஸ்ரீதேவி

தினசரி 4 காட்சிகள் ஜெயந்திரா மூவிஸ் நடித்த

**காத்திருப்பேன் உனக்காக**

**ராணி** (யாழ்ப்பாணம்) 77-வது நாள்

எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த

தினசரி 4 காட்சிகள்

**நாளை நமதே**

(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்நகர்) 74-வது தினம்

தினசரி 4 காட்சிகள் போன்: 7180

தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன்கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.

Now Showing

Sex Comedy

**CHASTITY BELT**

(கற்புக் கவசம்)

(Adults Only)

**வெலிங்டன்** [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்

விஜயகுமார் — ஜெய்சித்ரா

**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ஜெய்சங்கர்—சுஜாதா

**நீ ஒரு மகாராணி**

மகத்தான 2-வது மாதம்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - பத்மபிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த

ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**

(ஈஸ்ட்மன் கலர்)

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, செவ்.

கொழும்பில் நேற்று இழுக்கப்பட்ட 623-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:

**28 Z 0336**

1 லட்சம் ரூபா

2-வது பரிசு:

**48 E 0049**

40,000 ரூபா

3-வது பரிசு:

**06 Q 0736**

10,000 ரூபா

தலா ஆயிரம் ரூபா பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 07 A 0896 | 16 A 0193 |
| 16 A 0947 | 32 A 0836 |
| 38 A 0919 | 11 B 0501 |
| 11 B 0762 | 32 B 0656 |
| 10 B 0741 | 47 B 0151 |
| 07 C 0275 | 29 C 0504 |
| 45 C 0933 | 10 D 0673 |
| 33 D 0312 | 05 E 0082 |
| 44 E 0010 | 16 F 0160 |
| 28 F 0028 | 29 F 0994 |
| 35 F 0459 | 38 G 0841 |
| 06 H 0808 | 09 H 0849 |
| 18 H 0056 | 27 H 0865 |
| 30 H 0362 | 30 H 0438 |
| 34 H 0778 | 42 H 0829 |
| 35 J 0808 | 39 J 0848 |
| 44 J 0569 | 01 K 0605 |
| 02 K 0857 | 04 K 0617 |
| 08 K 0636 | 34 K 0290 |
| 22 L 0162 | 22 L 0719 |
| 22 L 0610 | |
| 39 M 0185 | 49 M 0608 |
| 34 N 0840 | 37 N 0683 |
| 41 N 0610 | |
| 48 N 0552 | 50 N 0121 |
| 20 O 0519 | 31 O 0453 |
| 04 P 0744 | 15 P 0391 |
| 28 P 0235 | 34 P 0770 |
| 42 P 0090 | 44 P 0764 |
| 49 P 0400 | 33 Q 0326 |
| 49 Q 0016 | 05 R 0283 |
| 07 R 0367 | 24 R 0075 |
| 24 R 0370 | 22 S 0006 |
| 37 S 0148 | 46 S 0278 |
| 49 S 0936 | 01 T 0201 |
| 09 T 0322 | |
| 11 T 0354 | 12 T 0041 |
| 29 T 0206 | 46 T 0153 |
| 50 T 0523 | 04 U 0220 |
| 04 U 0491 | 09 U 0725 |
| 40 U 0325 | 47 U 0874 |
| 14 V 0077 | 15 V 0016 |
| 20 V 0863 | |
| 22 V 0876 | 25 V 0419 |
| 16 W 0243 | 16 W 0760 |
| 36 W 0365 | 41 W 0250 |
| 03 X 0460 | 17 X 0417 |
| 20 X 0162 | 50 X 0919 |
| 07 Y 0445 | 08 Y 0568 |
| 01 Y 0016 | 27 Y 0559 |
| 46 Y 0123 | 13 Z 0970 |
| 22 Z 0859 | 24 Z 0842 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

**வெஸ்லி** (மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

ஜெய்சங்கர் - லஷ்மி

**ராணி யார் குழந்தை**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

சிவாஜி நடித்த

**ஹரிச்சந்திரா**

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)

தினசரி 6-30 9-45

சனி, ஞாயிறு 2-30

ரவிச்சந்திரன்-லதா

**வீட்டுக்கு வந்த மருமகள்**

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# "சிங்களக் கட்சிகள் எதுவும் எமது உரிமைகளைத் தராது"

## கல்வயலில் மலையக மாணவன்

மட்டுவில், செவ்வாய்

"மலைநாட்டுத் தமிழரின் சனப் பெருக்கத்தை மட்டந்தட்டி, அவர்களைச் சிறுபான்மை இனமாக அடிமைகளாகத் தொடர்ந்து அடக்கி ஒடுக்கி வைத்துக்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இந்த அடிப்படையிலேயே அரசு மலைநாட்டுத் தமிழ்த் தாய்மார்களுக்குத் திட்டமிட்டுக் குடும்பக் கட்டுப்பாட்டை அமுல்செய்து வருகிறது."

இவ்வாறு கல்வயல் பெருங்குளம் சந்திக்கு அருகாமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியும், பல்கலைக்கழக மாணவருமான திரு. எம். மாரிமுத்து கூறினார்.

சாவகச்சேரித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வ. ந. நவரத்தினத்தை ஆதரித்து திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மாரிமுத்து தொடர்ந்து கூறியதாவது:

"1947ல் மலைநாட்டுத் தமிழரில் ஏழு எம். பி.க்களைத் தெரிவுசெய்யக்கூடிய நிலையிருந்தது. இதன்பின் மலைநாட்டுத் தமிழரின் குடியுரிமையை மறுத்து வாக்குரிமைகளை ரத்துச் செய்தார்கள். 1977ல் ஓர் எம். பி.யைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பைக் கொடுத்தனர். அந்த நிலையையும் மாற்றியமைக்கு முகமாக மலைநாட்டில் எம்மைக் கொடுமைப்படுத்தினர். டெவன், டெல்டா, சங்குவாரித் தோட்டங்களில் காடையர்களைக் கட்டவிழ்த்துவிட்டுக் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு ஆகிய கொடுமைகளைச் செய்தனர். மலைநாட்டுத் தமிழரைப் பூண்டோடு அழிப்பதற்காகவே இந்த அக்கிரமம் செய்யப்பட்டது.

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்தலைவர் திரு தொண்டமான் தமிழர் விடுதலைக் கூட்டணியை முழுக்க முழுக்க ஆதரிக்கிறார். மலைநாட்டுத் தமிழரோ, அன்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸோ, சிங்களக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சியையோ நம்பவில்லை. அந்த இரண்டு கட்சிகளும் எமக்கு எந்தவிதமான நன்மையையும் செய்யவில்லை. இனிமேலும் கடைசிவரை இந்த இரண்டு கட்சிகளும் எமது உரிமைகளைத் தரும் என்பதில் எமக்கு நம்பிக்கையும் இல்லை.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் சட்டத்தரணி திரு. விஸ்வநாதன் பேசுகையில், "எமது மாபெரும் தலைவர் அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்தார். அவரின் கையெழுத்திட்ட அறிக்கை திரு. ஆர். என். சிவப்பிரகாசத்திடம் இருக்கிறது. திரு. சிவப்பிரகாசத்தின் தலைமையில், திரு ஜி ஜி. யின் ஆதரவுடன் நாம் 6 தொகுதிகளை எமக்கு ஒதுக்கும்படி கேட்டோம். தமிழர் கூட்டணி என்ற பெயரைத் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று வைக்கும்படி தலைவர் ஜி ஜி. எம்மை வற்புறுத்தியதின் பேரிலேயே, அது தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் சூட்டப்பட்டது" என்றார். சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன், திரு. வ. ந. நவரத்தினம் உட்பட பலர் பேசினர். (இ)

## 'கலைப்பாலமாக திகழ்ந்தவர்'

மாவிட்டபுரம், செவ்.

'இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஓர் கலைப்பாலமாகத் திகழ்ந்து கலைவளர்ச்சிக்கு உதவியதோடு பல வித்துவான்களை உருவாக்கி ஈழத்தின் கலைவளர்ச்சிக்கு வித்திட்ட கோண்டாவில் தவில் வித்துவான் திரு. ஆறுமுகம் பிள்ளையின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்' என பழம்பெரும் தவில்வித்துவான் திரு. ஆறுமுகம் பிள்ளையின் மறைவையொட்டி இலங்கை இசைவேளாளர் சங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கச் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரத்தினால் வெளியிடப்பட்டுள்ள இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத்தில் பல வித்துவான்களை உருவாக்கி நாகசுர-தவில் கலைகளை வளர்க்க முன்னின்றுழைத்த அமரர் ஆறுமுகம் பிள்ளை தமது மகன் வலங்கைமான் சண்முகசுந்தரத்தைச் சிறந்த தவில் வித்துவானாக்கி தமிழகத்தின் தலைசிறந்த வித்துவானாக விளங்கச் செய்துள்ளார். இதன்மூலம் இருநாடுகளுக்குமிடையில் கலைப்பாலமாகத் திகழ்ந்து வந்ததுடன் ஆத்மீகத்துறையின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்து வந்தார். (உ)

## இன்று புதிய பஸ் சேவை

வேலணை, புதன்

அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி ஊடாக இ. போ. சவின் புதிய பஸ்சேவை ஒன்று இன்று ஆரம்பிக்கப்படுகிறது

இப்புதிய சேவைமூலம் பிரயாணிகள் இடர்தீரும் என தெரிவிக்கப்படுகிறது. (உ)

## "தீண்டாமையை ஒழிக்கத் தொகுதி ஒதுக்கினால் போதுமா?"

மாவிட்டபுரம், செவ்.

"தீண்டாமை ஒழிப்புச் சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டபின்னரே ஓரளவில் தீண்டாமை ஒழிப்பிற்கு ஏற்ற சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதுவும்சிறுபான்மைத் தமிழரால் போராடியே வென்றெடுக்கப்பட்டன. இனிமேலும் நாம் போராடியே உரிமை பெறவேண்டியவர்களாக இருக்கிறோம்" என்று வட்டுக்கோட்டை சுயேச்சை அபேட்சகர் திரு. வை. இரட்டாயை ஆதரித்து, அராலி வடக்கு மயிலீயப்புலத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. மகேஸ்வரன் கூறினார்.

திரு. வை. இரட்டாய் பேசுகையில், "வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி தற்போது தமிழ் ஈழம் கேட்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதே மகாநாட்டில், எடுக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்புத் தீர்மானத்தை அமுல் நடத்தாமல் ஒரு தொகுதியை ஒதுக்கிவிட்டுத் தீண்டாமை ஒழிந்துவிட்டதென்று பேசுவது வெறும் கேலிக் கூத்தாகும்" என்றார். (அ)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வி. என். நவரத்தினம் கொடிகாமம் சந்தை மைதானத்தில் தம்மை ஆதரித்துநடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. செல்லையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் "தமிழர்கள் தாம் பிரிந்துதான் வாழவிரும்புகிறார்கள் என்பதனை கூட்டணிக்கு ஏகோபித்த ஆதரவு வழங்குவதன் மூலம் உலகுக்கு உணர்த்த வேண்டும்" என்றார்.

கிளிநொச்சி வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில் 'தமிழினம் ஒற்றுமைப்பட்டாலே சுபீட்சம் கிடைக்கும் என்பதாலேயே அமரர் ஜி ஜி யும் செல்வாவும் இணைந்தார்கள்' என்றார். சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

ஈழநாடு
The EELANADU

கொடிகாமம், செவ்.

"ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள மக்கள் தம் விடுதலைக்காகப் போராடும் போது, சுயேச்சையாகப் போட்டியிடும் தனிமனிதனுக்கு கிடைக்கும் வாக்கையோ அல்லது வெற்றியைக் கொண்டோ உலகம் கணிப்பதில்லை. ஒரு கட்சிக்கு கிடைக்கும் ஆதாரவைக் கொண்டே இனப்பிரச்னை உலகப் பிரச்னையாக மாறும். இன்று தமிழரின் பிரச்னை உலகப் பிரச்னை என்ற அளவிலேயே இருக்கிறது."

# "தனிமனிதரின் வெற்றியில் உலகம் அக்கறை இராது"

## கொடிகாமத்தில் வி. என்.

இவ்வாறு சாவகச்சேரித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு.

(7-ம் பக்கம் பார்க்க)

# பயங்கர ஆயுதங்கள் மீட்பு: ஐவருக்கு ரிமாண்ட்!

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு சங்கராஜ மாவத்தையில் உள்ள பள்ளிவாசல் வளவில் பயங்கர ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது இது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 5 பேரும் இம் மாதம் 28ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான எம். எஸ். எம் சுஹூட், எம். ரிஸ்வி, எம். அஸார், எஸ். ராஜானந்த, என். டி சில்வா ஆகிய ஐவரும் நேற்று மாளிகாகந்த மாஜிஸ்ரெட் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் முன்நிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே இவர்களை 28ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டனர்.

கடந்த ஞாயிறன்று கைக்குண்டு, பலவகை ரிவோல்வர்கள், வாள், கத்தி, சோடரி, போன்ற பெருந்தொகையான பயங்கர ஆயுதங்கள் குறிப்பிட்ட பள்ளி வாசல் வளவில் மறைத்து வைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது தெரிந்ததே. (இ)

## தமிழ்ழ—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை நிலைநாட்டவும் உதய சூரியனுக்கே வாக்களிக்குமாறு தமிழ் - முஸ்லிம் வாக்காளர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம். இத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றிபெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களான திருவாளர்கள் மு. சிவசிதம்பரமும், அ. அமிர்தலிங்கமும் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் இணைச் செயலதிபர்கள் இருவரும்விடுத்துள்ளவேண்டுகோளில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

### 26 பேருக்கும் ஆதரவு தருக

வடக்குக்கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம் தொகுதியிலும் மொத்தம் 23 தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி 24 வேட்பாளர்களை நிறுத்தியிருக்கின்றது. கூட்டணியின் ஆதரவுடன் அதன் ஓர் அங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் கொழும்பு மத்தியிலும் நுவரெலியா - மஸ்கெலியாத் தொகுதியிலும் இரு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் இந்த 26 வேட்பாளர்களுக்கும் ஆதரவு அளிக்குமாறு தமிழ்ப்பேசும் வாக்காளர்களை வேண்டுகிறோம்.

### இளைஞர்களின் உற்சாகம்

எமது வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளில் எல்லாம், முன் எத்தேர்தலிலும் இல்லாத அளவுக்கு உற்சாகம் பொங்கி வழிவதைக் காணுகின்றோம். சிறப்பாக இளைஞர் சமுதாயத்தின் ஆர்வம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. இந்த ஆர்வத்தையும் உற்சாகத்தையும் சரியான வழிப்படுத்தி வாக்குகளாகப் பெட்டிகளில் சேர்க்க வேண்டிய நேரம் வந்து விட்டது. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி, தமிழ் முஸ்லிம் வாக்காளர்கள் அத்தனைபேரையும் வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்களிக்கச் செய்யுமாறும் எவ்வளவு ஆத்திரமூட்டப்பட்டாலும் பொறுமையிழக்காது பணி புரியுமாறும் எமது இளந்தொண்டர்களை வேண்டிக்கொள்கிறோம்.'

# தமிழ் ஈழம் தான் ஒரேவழி என்கிறார் குலசிங்கம்

யாழ்ப்பாணம், புதன்

"தமிழ் ஈழம்தான் ஒரேயொருவழியாக இருக்குமாப் போல் தோன்றுகின்றது. இதற்கு ஒரு அடிப்படையான நிலை இத்தேர்தலில் தமிழர் ஒற்றுமையாக நடந்து கொள்வதுதான்" என்று பழம்பெரும் அரசியல்வாதியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவருமான திரு. ஏ. வி. குலசிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது;

"கடந்த சிலகாலமாக தமிழரின் வருங்காலத்தைப் பற்றி வெளிவந்த விஷயங்களை வாசித்துப் பார்த்தேன். சுடும் சுகயீனம் காரணமாகஇவ்விஷயத்தைப்பற்றி என் அபிப்பிராயங்களை எடுத்துக்கூற என்னால் இயலாமல் இருக்கிறது. ஆனால் நான் ஒரு தமிழன் என்ற முறையிலும் இலங்கைத் தினசரிப் பத்திரிகைகள் சிலவற்றின் ஆசிரியராயும் கட்டுரை எழுத்தாளராயும் 1909-ம் ஆண்டு தொடக்கம் இருந்து நான் பெற்றுக்கொண்ட உணர்ச்சி இதனை எழுத என்னை ஏவுகின்றது. பூரண மாநில சுயாட்சி மூலமாக தமிழர் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்து கொள்ளலாம். ஆனால் இதையும் பெரும்பான்மையினர் மறுக்கின்றனர். ஆகவே, தமிழ்ஈழம்தான் ஒரே யொரு வழியாக இருக்குமாப்போல் தோன்றுகின்றது. என் [illegible]றையைக் கையாளுவத[illegible]யோ தமிழர் தங்கள் சுயா[illegible]யை ஸ்தாபித்து ஸ்திரப்ப[illegible]னாலும் இதற்கு ஒரு அடிப்[illegible]டையான நிலை இந்தத் தேர்த[illegible]ல் தமிழர் ஒற்றுமையாக ந[illegible]ந்து கொள்வதுதான். ஆளுக்[illegible]காரு கட்சியும், ஆளுக்கொரு கூட்டணியும், ஆளுக்கொரு கொள்கையும் இந்த நேரத்தில் தமிழினத்திற்கு மிகப் பாதகமாக முடியும். அது மாத்திரமல்ல போட்டியின்றி தமிழர் விடுதலைக் கூட்டணி நியமித்துள்ள அபேட்சகர்களை தமிழராகிய நாங்களும் போட்டியின்றி தெரிவு செய்யாவிட்டால் தமிழரின் விடுதலை இயக்கம் வெறும் கேலிக் கூத்தாக முடியும். இதை தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் இத் தேர்தலில் மறந்துவிடக் கூடாது.'

# சுயேச்சை வேட்பாளர் காலமானார்

(பொத்துவில், செவ்.)

பொத்துவில் தொகுதியின் ஒரு சுயேச்சை வேட்பாளர் திரு. அம்பலாங்கொடகே அல்பேர்ட் சரணபால. இன்று காலையில் நிகழ்ந்த விபத்தில் காலமானார்.

இவர் சென்று கொண்டிருந்த ஜீப்வண்டி மற்றொரு வாகனத்துக்குஇடமொதுக்குகையில் ஜீப் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியாகும். மொத்தம் எட்டுப்பேர் இங்கு தேர்தல் களத்தில் நிற்கின்றனர். இவர்களில் நால்வர் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர்,

## தமிழ—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் கூறினார்

அவர் தொடர்ந்து பேசுகையில்,

"பாகிஸ்தானில் பூட்டோ சர்வாதிகாரமான முறையில் தேர்தலை நடத்தி தமக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட்டவரையே கடத்தினார். ஆனால் இன்று பூட்டோ சிறையில் [illegible]ாடுகிறார். மக்கள் சர்வாதி[illegible]ாரத்தைச் சகிக்கமாட்டார்[illegible]ள் வீரர்களுக்கு எதிராக[illegible]ளர்ச்சி செய்யமுடியும் என்[illegible]தப் பாகிஸ்தானிய மக்[illegible] காட்டி சர்வாதிகாரத்[illegible]எதிர்த்தார்கள்" என்று[illegible] (கூ)

# வீதியோரங்களில் நின்று தேர்தல் பிரசாரம்

பண்டத்தரிப்பு,செவ்வாய்

வட்டுக்கோட்டைத்தொகுதியில் இந்திய- இலங்கை இணைப்பு இயக்கத்தின் சார்பில் போட்டியிடும் பரிஸ்டர் மு அம்பலவாணர் தனியாக சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

பண்டத்தரிப்பு பகுதிக்கு வருகை தந்த அவர் வீதி ஓரங்களில் நின்று மக்களைத் திரட்டி தமது இயக்கத்தின் கொள்கைகளை விபரமாக எடுத்துரைத்தார்.

சில இளைஞர்கள் கேட்ட கேள்விகளுக்கு அமைதியாக பதிலளித்தார்.

பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடன் அவரது விளக்கங்களை கேட்டுக் கொண்டிருந்தனர். (க)

## ஆட்சிமன்றம்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டதாவது:

"தமிழர் சுயாட்சிக் கழகத்தைப் பொறுத்த மட்டில், சிங்களக்கட்சிகளோடு பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்கிற பேச்சேகிடையாது. கடந்த கால அனுபவங்கள் தமிழ் மக்களுக்குப் போதும் இனியும் நாம் நம்பி ஏமாற முடியாது. எந்தச் சிங்களக் கட்சியும் தனிநாட்டினைத் தமிழருக்குத் தரமாட்டாது. போராடித்தான் தனிநாட்டை நாம் மீண்டும் ஸ்தாபிக்கமுடியும். நாநூறு ஆண்டுகளுக்கு முன்னால் போர்த்துக்கிச ஏகாதிபத்திய வாதிகளிடம் போர்முனையில் நாம் இழந்த மண்ணை போராட்டம் நடத்தித்தான் நாம் மீட்க வேண்டும். இதைத்தான் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நான் சொல்லி வருகின்றேன். மலைநாட்டுத்தமிழ் மக்கள் ஐந்தே கால் லட்சம் பேரை இந்தியாவுக்கு நாடு கடத்துவதை நான் எதிர்த்தது குற்றம் என்றார்கள், தமிழர்களைக் கள்ளத்தோணிகளாகக் கருதுகின்ற அடையாள அட்டைத் திட்டத்தை நான் எதிர்த்ததற்காக என்னைக் கட்சியை விட்டே வெளியேற்றினார்கள். அன்றுநானும்எனது மனச்சாட்சிக்குத் துரோகம் இழைத்திருந்தால் தொடர்ந்து எம். பி. ஆக இருந்திருக்கமுடியும் ஆனால் அதை நான் விரும்பவில்லை.

"தமிழர் சுயாட்சிக் கழகமும் கூட்டணியோடு இணைய வேண்டுமென்று விரும்பிய அன்பர்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்தே நாம். கூட்டணியோடு இந்த வருடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் கூட்டணியுடன் நாம் இணைந்தாவது கூட்டணியின் தவறான போக்கை போராட்டப்பாதைக்கு திசைதிருப்ப முடியாதா என்றே நாம் யோசித்தோம் ஆனால் முடியவில்லை திரு அமிர்தலிங்கத்தின் முயற்சிகள் கூடமுறியடிக்கப்பட்டது. (அ)

## வாக்களி—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிசாரின் பாவனைக்காகவும், பல ஜீப் வண்டிகள் வந்து சேர்ந்துள்ளன,

வாக்களிப்பு நிலையங்களுக்கு இன்று தேர்தல் உத்தியோகத்தர்கள் சென்று பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார்கள்.

வாக்களிப்பு நிலையங்களில், அப்பந்தப்பகுதி கிராம சேவகரின் உதவியுடன், வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் உள்ள தனித்தனி அறைகளில், யாழ்குடாநாட்டிலுள்ள 11 தேர்தல் தொகுதிகளுக்கான வாக்குகளும் எண்ணப்படும்.

வாக்குப் பெட்டிகள், இரவு 8மணிக்கு முன்னர் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திற்கு வந்து சேர்ந்துவிடும் எனக்கூறப்படுகிறது.

இரவு 8மணிக்கு முன்னர், வாக்குசீட்டு எண்ணும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிடும். நள்ளிரவு 12மணிக்கு பின்னர், தேர்தல் முடிவுகள், அறிவிக்கப்படும் என எதிர்பார்கபடுகிறது.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில், பொதுமக்கள், தங்கியிருப்பதற்கு வசதியாக, பூங்கா முழுவதும் மின்சார ஒளி இணைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ)

### ஐ. தே. க. ஆட்சியில்

# சட்டமும் ஒழுங்கும் மீண்டும் உயிர்பெறும்

## ஜே. ஆர் கூறுகிறார்

கொழும்பு, செவ்வாய்

"இந்த நாட்டில் இன்று சட்டமும், ஒழுங்கும் மறைந்துவிட்டது. இதன்காரணமாக அரசியல் வாதிகள் சட்டத்தை பொருட்படுத்தாதசக்திகளாகிவிட்டனர்.

எனவே அரசியல் வாதிகளை வெறிகாரராகவும் திருடர்களாகவும் ஒழுங்கற்றவர்களாகவும் காணக்கூடியதாக இருக்கிறது."

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெனியாய தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

' ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் ஜனநாயகத்தை நிலைநிறுத்த மீண்டும் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும்.

அரசியல்வாதிகளுக்கு ஒழுக்கக்கோட்பாடு மிகமிக அவசியம். திருமதி பண்டாரநாயக்கா இதுவிஷயத்தில் உரிய கவனம் செலுத்தத் தவறியமையினால் இந்த ஒழுக்கமற்ற எம். பிக்கள் இருந்தனர்

ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் இதுபோன்ற தவறுகளை திருத்திக்கொள்ளும் வெறிகாரர்களையும் ஸ்திரிலோலர்களையும் திருடர்களையும் ஒழுக்கமற்றவர்களையும் எம பிக்களாகத் தெரிவு செய்தால் அவர்கள் நாட்டின் தேசிய கலாச்சாரத்தையும் நாட்டையும் கெடுத்துவிடுவார்கள்.

இந்தியாவில் முன்னர் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தியும் திருமதி பண்டாரநாயக்காவை போன்றே ஆட்சி செலுத்திவந்தார் இந்தியாவில் இந்திராவின் மகன் சஞ்சய் காந்தி வகித்த இடத்தை இலங்கையில் அநுரா பண்டாரநாயக்கா வகித்து வருகிறார்.

இந்திய ஆட்சி மன்றம் கலைக்கப்பட்ட பின்னர் லோக சபைத் தேர்தலில் போட்டியிட்ட தாயும் மகனும் தோற்கடிக்கப்பட்டனர். இலங்கையிலும் திருமதி பண்டாரநாயக்காவுக்கு இந்த நிலையே ஏற்படும். (இ)

# உற்சவம்

மட்டுவில், புதன்

சரித்திரப் புகழ்வாய்ந்த மட்டுவில் வேம்படி அம்பலந்துறை வயலூர் முருகன் வருடாந்தமகோற்சவம்நாளைவியாழக்கிழமை ஆரம்பமாகிறது. பிரதமகுரு பிரம்மஸ்ரீ க. பாலசுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும் இந்த உற்சவத்தின்போது பத்து நாட்களும் மத உபந்நியாசங்கள் இடம்பெறும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 20ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.